

கனடாவிலிருந்து மாதமிருமுறை வெளிவரும் நமக்கான தமிழ் செய்திப் பத்திரிகை Est. 2018 இலவச இதழ்

REGISTERED NEWPAPER IN CANADA
www.puthiyakural.ca

புதிய குரல்
PUTHIYAKURAL

PUTHIYAKURAL NEWSPAPER IN ONE OF THE LEADING TWICE A MONTH NEWSPAPER IN CANADA

மலர் - 01 | 29 ஒக்ரோபர் 2023 | இதழ் - 01 | பக்கங்கள் 16



புதிய குரலின் புதிய அத்தியாயம்
கனடா தேசத்திலிருந்து துவங்குகிறது!

ஈழத்தில் ஐந்தாண்டுகால கடின ஊடகப் பயணத்திற்கு கிடைத்த சுதந்திரமே
ஒக்டோபர் 29

2018 ஏப்பிரல் மாதம் இலங்கையில் மாதாந்த சஞ்சிகையாக ஆரம்பிக்கப்பட்ட புதிய குரல் பின்னர் 2019ல் மாதாந்த செய்தி பத்தரிகையாக மாற்றமடைந்து 2019 நவம்பரில் மாதமிருமுறை வெளிவரும் பத்தரிகையானது. இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்குரல் என்ற வாசகத்துடன் தொடர்ந்தும் பயணித்த புதிய குரல் ஊடகமானது வடக்கு கிழக்கு உள்ளிட்ட ஏனைய பிராந்திய குரலற்ற மக்களின் குரலாக இயங்கி வந்தது.

இலங்கையில் நிலவும் நெருக்கடியான அரசியல் சூழ்நிலை மற்றும் ஊடகங்கள் மீதான நெருக்கடிகள், பொருளாதார பிரச்சினைகள், உண்மைகளை வெளிக்கொணர்ந்து சொல்ல முடியாமை போன்ற பல்வேறு காரணங்களினால் இலங் கையை விட்டு வேறு நாடு ஒன்றிலிருந்து பத்திரி கையினை வெளியிடவேண் டும் என்ற போராட் டத்தில் இறுதியில் கனடாவிலிருந்து இலங்கை மக்களின் உரிமைக்குரலாக இயங்க திட்டமிடப் பட்டு வெற்றியில் முடிவடைந்துள் ளது. புதிய குரல் நியுஸ்பேபர் பப்ளிகேசன் எல். எல்.சி என்ற நிறுவனத்தின் கீழ் பதிவு செய்யப் பட்டு கனடா வின் ஒன்றாரியோ மாகாணத்தின் டொரண்டோ நகரிலிருந்து இயங்கவுள்ளது.

2023 ஒக்டோ பர் 29 ஸ்கார்பு ரோவில் இடம் பெறும் இந்த விழா புதிய குரலுக்கு கிடைத்த சுதந்திர தின விழா என்று பத்திரிகையின் ஸ்தாபகர் தெரிவித்துள்ளார். இதன்போது பத்திரிகை வெளியிடப்படவுள்ளதுடன் முக்கிய உரைகளும் நிகழ்த்தப்படவுள்ளன.

இராணுவம், புலனாய்வுத் துறையினர் வியாபாரிகளை மிரட்டுகின்றனர்



கொழும்பு, ஒக்.29

ஹர்த்தாலை அனுஸ்டிக்க வேண்டாம் என இராணுவ மற்றும் புலனாய்வுத் துறையினர் வியாபாரிகளை மிரட்டுவதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன் தெரிவித்துள்ளார்.

ஹர்த்தால் தொடர்பில் ஊட

மிகுதி 02 ஆம் பக்கத்தில்...

விடுதலைப் புலிகள் மீள் உருவாக்கம்: விஜயகலா மகேஸ்வரன் விடுதலை!

கொழும்பு, ஒக்.29

விடுதலைப் புலிகள் மீளுரு வாக்கம் குறித்த வழக்கில் இருந்து முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ் வரனை விடுதலை செய்யது கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளை மீண்டும் உருவாக்க வேண்டும் என்பதே

மிகுதி 02 ஆம் பக்கத்தில்...

உண்மையை சொல்லும் காலம் வெகு தொலைவில் இல்லை; வெள்ளைக்கொடி விவகார சாட்சியம்

புதிய குரலுக்கு பிரத்தியேக பேட்டி

இறுதி களமுனையில் அமைதி பேச்சுவார்த்தையை முன்னின்று தொலைபேசிவாயி லாக நடாத்தி முன்னாள் இலங் கையின் எம்பியும் மாமனிதர் சந்திர நேருவின் புதல்வருமான ரெஹான் சந்திரகாந்த் புதிய குரலுக்கு பிரத்தியேக பேட்டி யொன்றை வழங்கியிருந்தார். அந்த பேட்டியின் முழுவடிவம் அடுத்த இதழில் பிரசுரிக்கப் படும். அதில் குறிப்பிட்ட அவர், இலங்கயில் இலட்சக்கணக்கில் மக்கள் கொன்றழிக்கப்பட்டனர் அந்த நிலை மாறியும் இன் றிருக்கும் தலைவர் மக்களை கொல்லாமல் கொல்கிறார்கள். அன்று இறுதி களமுனையில் தலைவர்கள் தடுமாறியதையும் அவர்களுக்கு என்ன நடந்தது என்பதையும் தான் அறிவேன். உண்மைகள் எப்போதும் சாகாது ஆனால் அவைகளுக்கு நீதி கிடைக்கும் என்றார்.

இந்தியாவில் உள்ள கனடிய தூதரக அதிகாரிகள் 41 பேர் உடன் அழைக்கப்பட்டனர்

வெளியுறவுத்துறை அமைச்சு தகவல்

ரொரன்டோ, ஒக்.29

இந்தியாவில் உள்ள கனடா தூதரகத்தில் இருந்து அதிகாரிகள், அவர்களது குடும்பத்தினர் உள்ளிட்ட 41 பேரை கனடா திரும்பப் பெற்றுள்ளது. காலிஸ்தான் பயங்கரவாதி நிஜ்ஜார், கனடாவில் அடை யாளம் தெரியாத மர்ம நபர்களால் சுட்டுக்கொலை செய்யப்பட்டார். இந்த கொலையில் இந்தியாவின் புல னாய்வு அமைப்பிற்கு தொடர்பு இருப்பதாக

மிகுதி 02 ஆம் பக்கத்தில்...

அரகல போராட்டத்திற்கு ஆதரவு வழங்கியவர்கள் நாடு திரும்பியதும் தொடரும் புலனாய்வுதுறை

மனித உரிமைகள் அமைப்பு கண்டனம்

கொழும்பு, ஒக்.29

கொழும்பில் அரகல போராட்டம் இடம்பெற்றுக்கொண்டிருந்த காலப் பகுதியில் உலகம் முழுவதுமுள்ள இலங் கையை சேர்ந்த பலர் தாம் இருக்கும் நாடு களில் சிறிய அளவில் அரகல போராட் டத்திற்கு ஆதரவளித்து வீதிகளில் பதா தைகள் ஏந்தியும், சமூக வலைத்தளங்களி லும் ஆதரவு வழங்கினர். இவர்களில் பலர் ஐரோப்பிய மற்றும் கனடாவில் உள்ளவர் கள் ஆவர். இலங்கையின் புலனாய்வு துறை யினர் இவர்களின் புகைப்படங்களை சேமித்து வைத்து தற்போது கட்டுநாயக்க விமான நிலைய இராணுவ புலனாய்வு அதிகாரிகளின் உதவியுடன் மீண்டும் இலங்கைவரும் போராட்டகாரர்களை அச் சுறுத்தும் முயற்சியில் ஈடுபட்டுவருதாக அறிய முடிகிறது. கடந்த வாரங்களில் இப் படியான சம்பவங்கள்

மிகுதி 02 ஆம் பக்கத்தில்...

இந்தியர்களுக்கான விசா பரிசீலனை தாமதமாகும்: கனடா புலம்பெயர்தல் அமைச்சர் தகவல்

ரொரன்டோ, ஒக்.29

கனேடிய தூதரக அதிகாரிகளை இந் தியா வெளியேற்றியுள்ளதால், இந்தியர் களுக்கான விசா பரிசீலனை தாமதமாகும் என கனடா புலம்பெயர்

மிகுதி 02 ஆம் பக்கத்தில்...

இந்திய - இலங்கை அரசின் திட்டத்திற்குள் சிக்கி பலிக்கடா ஆக வேண்டாம்



எதிர்வரும் 21 மற்றும் 22ஆம் திகதிகளில் யாழ்ப்பா ணத்தில், தென்னிந்திய பிரபல இசையமைப்பாளரால் ஏற்பாடு செய்யப்பட்ட இசை நிகழ்ச்சியானது நடாத்துவ தற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இந் நிலையில் குறித்த இசை

மிகுதி 02 ஆம் பக்கத்தில்...

இந்தியாவில் உள்ள கனடியர்களுக்கு அச்சுறுத்தல்

உதவி தேவைப்பட்டால் டெல்லி அலுவலகத்தை உடன் தொடர்பு கொள்ளவும்

சென்னை, ஒக்.29

இந்தியாவில் இருந்து 41 தூதரக அதிகாரிகளை கனடா திரும்பப் பெற்றுள்ள நிலை யில், இந்தியாவில் வாழும் கனடா நாட்டினர் எச்சரிக் கையுடன் செயல்பட வேண் டும் என கனடா வலியுறுத்தி யுள்ளது.

"இந்தியாவில் பயங்கர வாத அச்சுறுத்தல் இருப்பதால் எச் சரிக்கையுடன் செயல்பட வேண்டும். இருநாட்டு உறவு மோதல் முற்றியுள்ள நிலையில் இந்தியாவில் கனடாவுக்கு எதி ராக போராட்டம்நடத்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மிகுதி 02 ஆம் பக்கத்தில்...

அடுத்தவருடம் இலங்கையின் அதிபர் தேர்தல் இலங்கை அதிபர் ரணில் உறுதி

கொழும்பு, ஒக்.29

ஜனாதிபதி தேர்தல் அடுத்த வருடம் நடைபெறும் என ஜனா திபதி ரணில் விக்ரமசிங்க தெரி வித்துள்ளார்.

கொழும்பு சுகத தாச உள்ளக விளையாட்டரங்கில் 21.10.203 நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய மாநாட் டில் உரையாற்றும் போதே ஜனாதி பதி இவ்வாறு கூறினார்.

அதன் பின்னர் பாராளுமன் றத் தேர்தல் சாத்தியமாகுமாகும் பட்சத்தில் மாகாண சபைத் தேர் தலையும் 2025 ஆம் ஆண் டின் முற்பகுதியில் நடத்தப்படும் எனவும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

தமிழ் பேசும் மக்களின் உரிமைக்குரல்

இந்தியாவில் உள்ள...

(முலதாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்ச்சியை அந்த நாட்களில் நடாத்த வேண்டாம் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் தெரி வித்துள்ளனர்.

இன்றையதினம் அவர்கள் வெளியிட்ட ஊடக அறிக்கை யிலேயே இதனை குறிப்பிட்டுள்ளனர். அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தாங்கள் எதிர்வரும் ஒக்டோ பர் மாதம் 21,22 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் இசை நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

ஒடுக்கப்பட்ட மக்களின் குரலிவை வெளிக்கொணரும் தங்களின் இசை யமைப்பில் உருவான பாடல்களையும், இசையையும் ஈழத் தமிழ் மக்களாகிய நாங்களும் கேட்டு இரசித்து மகிழ்கி றோம். அந்த வகையில் உங்களுக்கு ஏராள மான இரசிகர்கள் எம்மத்தியில் இருக்கிறார்கள்.

பாரிய இனவழிப்பினை தமிழினம் சந்தித்ததனை நீங்கள் அறிவீர்கள். இவ் வினவழிப்பில் கொல்லப்பட்ட மக் களினை நினைவேந்தல் செய்வதன் முக்கியத்துவத்தையும் நீங்கள் உணர்வீர் கள். இந்தநிலையில், தங்களால் யாழ்ப் பாணத்தில் இசை நிகழ்ச்சி நடத்துவதாக தீர்மானிக்கப்பட்டுள்ள ஒக் டோபர் 21 மற்றும் 22 ஆம் திகதிகளாகிய இதே தினங் களில் 1987 ஆம் ஆண்டு யாழ்ப் பாணம் போதனா வைத்திய சாலையில் பணியாற்றிக் கொண்டிருந்த வைத்தியர் கள், தாதியர்கள் உட்பட நோயாளர் கள் பொதுமக்கள் இந்திய அமைதிப்படை யினரால் கட் டுப் படுகொலை செய்யப் பட்டிருந்தவர் என்பதனை நீங்கள் அறிந் திருக்கக்கூடும்.

அநியாயமான முறையில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவித் தமிழ் உறவு களை வருடா வருடம் நினைவுகூரப் பட்டு வருகிறது. இந்த துயர் மிகுந்த நாட்களில், நினைவேந் தல்களுடாக அடுத்த சந்ததி யினருக்கு தமிழின போராட் டத்தின் நியாயங்கள் சென்ற டையும் என நாம் நம்புகிறோம். இதனை மடைமாற்றி இந்நாட்களை இளைஞர் களுக்கான மகிழ்ச்சிகரமான களியாட்ட நாட்களாக மாற்றியமைக்க முயலும் இலங்கை இந்திய அரசுகள், தங்களை பலிக்கடா வாக்க முயல்கிறார்கள்.

இந்நினைவேந்தல் நாட்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மேற்படி இசை நிகழ்ச்சிகளில் தாங்கள் தெரிந்தோ தெரி யாமலோ கலந்து கொள்வதானது, அநி யாயமாக படுகொலை செய்யப்பட்ட அப்பாவித் தமிழ் உறவுகளை அவமதிக் கும் செயற்பாடு என்பதுடன் பேரினவாதத் தால் இன்றும் தடைபெற்று வரும் கட்ட மைக்கப்பட்ட இனவழிப்புக்கு துணை நிற்கும் செயற்பாடாகவும் அமைந்துவிடும்.

மேற்படி நினைவேந்தல்களுடாக தமிழினம் அடுத்த சந்த திக்கு கடத்த முயலும் தமிழின விடுதலை வேட்கைக் கும் எதிரான செயற்பாடாகவும் அமையும். தாங்கள் தமிழ்நாட் டிலிருந்து வருகைதந்திருப்பவர் என்னும் வகையில், இந்திய படையினரால் மேற்கொள்ளப் பட்ட படுகொலைகளின் நினைவு தினங் களில் தங்களின் இசை நிகழ்ச்சி நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டிருப்பது, இன்றும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்புக்கு உள்ளாக்கப் பட்டுக் கொண்டிருக்கும் தமிழ் மக்களால் தவறாகவே பார்க் கப்படும் என்பதனை அன்புரி மையுடன் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இறந்தவர்களை நினைவேந்தும் உரிமையை சர்வதேச சட்டங்களும் இலங் கைச் சட்டங்களும் அனுமதித்துள்ள போதும் , படுகொலை செய்யப் பட்ட தமிழ் மக்களின் நினைவேந்தல்களுக்கு சட்டவிரோத மாக தடைகளை ஏற்படுத் தும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டுவரும் தரப்புக்கள், நினைவேந்தல்களுக்கு சட்ட ரீதியாக தடைகளை ஏற்படுத்த முடியாத போது, இந்நாட்களைத் தெரிவு செய்து களியாட்ட தினங்களாக மாற்றும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின் றனர். இத்தகைய முயற்சிகளை புரிந்துகொள்ள வேண்டும் என்று தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

உலகத் தமிழ் மக்கள் மத்தி யில் பெரும் இரசிகத்தளத்தைக் கொண்டிருக் கும் தாங்கள், தமிழ்மக்களின் வலிகளை யும், இழப்புக்களுக்கும், தியாகங்களுக் கும்வேதனைகளையும்உணர்ந்துகொண்டு, மதிப் பளித்து குறித்த திகதிகளை மாத்தி பொருத்தமான வேறொரு திகதியில் தங்கள் நிகழ்வை மாற்றியமைக்குமாறு வேண்டிக்கொள்கிறோம் - என்றுள்ளது.

TUTORING
ALL GRADES - ALL SUBJECTS
90% MARKS 100% RESULTS
HELPING STUDENTS SUCCEED SINCE 1997
We not only help the Students with their homework, but also make sure they feel more comfortable in their regular schools.
I.B.Students Welcome FRENCH IMMERSION AVAILABLE.
EQAO for Grade 3 & Grade 6. Literacy Test for High School
OUR SPECIAL RATES in our Academy
GRADES 1-5 CA$ 20 / HOUR
GRADES 6-12 CA$ 30 / HOUR
CONTACT
M. ASHRAF PARWAZ, Principal
THE TALENT ACADEMY
8130 SHEPPARD AVE. EAST/ MORNING SIDE . UNIT 202, ON
TEL : 647 333 2576

அரகல...

(முலதாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றுள்ளதுடன் குறித்த நபர் களின் வீடுகளுக்கு சென்று புலனாய்வு துறையினர் விவரங்களை சேமித்து வரு கிறார்கள். சனல் - 4 வீடியோ வெளி யானதன் பின்னரே இந்த கெடுபிடிகள் ஆரம்பித்துள்ளது. இவைகள் அடிப்படை மனித உரிமை மீறலாகும் என மனித உரிமை அமைப்புக்கள் குற்றம் சாட்டப் பட்டுள்ளது. இவை தவிர அகதி அந்தஸ்து பெற் றுள்ள பலரின் வடக்கு கிழக்கிலுள்ள வீடுகளுக்கு சென்று விசாரணை செய்வதா கவும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள்...

(முலதாம் பக்கத் தொடர்ச்சி)

தமது முக்கிய நோக்கம் என அவர் தெரிவித்த கருத்து தொடர்பாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற அரச நிகழ்வொன்றில் சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சராக இருந்த விஜயகலா மகேஸ்வரன் இவ் வாறு கூறியிருந்தார். அவரது உரை இனங்களுக்கு இடையிலான ஒற்று மையை சீர்குலைக்கும் வகையில் அமைந் தது என தெரிவித்து அன்றய தினமே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில் குறித்த வழக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் விசாரணை எடுத்துக்கொள்ளப்பட்ட போதே அவர் வழக்கில் இருந்து விடு விக்கப்பட்டார். பிணையில் விடுவிக்கப்பட்ட விஜய கலா மகேஸ்வரனை சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் விடுதலை செய்யுமாறு கொழும்பு நீதவான் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தியர்களுக்கான...

(முலதாம் பக்கத் தொடர்ச்சி)

தல் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஜூன் மாதம் 18ஆம் திகதி, சீக்கிய பிரிவினைவாத அமைப்பொன்றின் தலைவரான ஹர்தீப் சிங் நிஜ்ஜர் என்ப வர் கனடாவில் கொல்லப்பட்ட நிலை யில், அந்த சம்பவத்தின் பின்னணியில் இந்தியா இருப்பதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வெளிப்படையாக குற்றம் சாட்டியிருந்தார்.

அதைத் தொடர்ந்து இரு நாடுகளும் எடுத்த நடவடிக்கைகளால், இரு நாடு களுக்குமிடையிலான தூதரக உறவில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

சமீபத்தில், கனேடிய தூதரக அதி காரிகள் 41பேரை இந்தியாவிலிருந்து வெளியேற்றுமாறு இந்தியா கனடாவை அறிவுறுத்தியது. அதன்படி, அவர்கள் இந்தியாவிலிருந்து வெளியேறிவிட்டதாக கனடா வெளி விவகாரங்கள் துறை அமைச் சரான Mélanie Joly தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், நேற்று ஊடகவியலா ளர்கள் சந்திப்பு ஒன்றில் பேசிய கனடா புலம்பெயர்தல் துறை அமைச்சரான Marc Miller, கனேடிய தூதரக அதிகாரிகள் இந்தியாவிலிருந்து வெளி யேறியுள்ளதைத் தொடர்ந்து, கனடா வர விரும்பும் இந்தியர்களுக்கான விசா பரி சீலனை தாமதமாகும் என்று கூறியுள்ளார்.

கனடாவின் புலம்பெயர்தல், அகதி கள் மற்றும் குடியுரிமை அமைப்பும், இந்தியாவில் அதன் அதிகாரிகளின் எண்ணிக்கையைக் குறைக்க இருப்பதாக புலம்பெயர்தல் துறை அமைச்சரான ஆயசஉ ஆடைடநச தெரிவித்துள்ளார்.

இதற்கு முன் இந்தியாவில் கனேடிய புலம்பெயர்தல், அகதிகள் மற்றும் குடி யுரிமை அமைப்பின் அதிகாரிகள் 27 பேர் இருந்த நிலையில், அந்த எண்ணிக்கை வெறும் 5ஆக குறைக்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியர்கள் கனடா விசா பெறுவதற் கான நடவடிக்கைகளை, இந்தியாவிலி ருக்கும் கனேடிய அதிகாரிகளும் செய்ய வேண்டியிருக்கும். அப்படிப்பட்ட நிலை யில், இந்தியாவில் கனேடிய அதிகாரி களின் எண்ணிக்கை குறைக்கப்படுவதால், இனி இந்தியர்களின் விசா பரிசீலனை தாம தமாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

இராணுவம்,...

(முலதாம் பக்கத் தொடர்ச்சி)

கங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், இது புதியவகை அடாவடித் தனமான மற்றும் ஜனநாயக விரோதமான செயற்பாடு என்றும் குற்றம் சாட்டியுள்ளார்.

மக்களின் பூர்வீக நிலங்களை அப கரிப்பதன் ஊடாக வரலாற்றை சிதைக் கும் செயற்பாட்டை தடுத்து நிறுத்தவே இந்த போராட்டத்தை நடத்துவதாக செல்வம் அடைக்கலநாதன் கூறியுள்ளார்.

எவ்வாறான தண்டுகள் ஏற்பட்டாலும் அனைத்து தமிழ் பேசும் மக்களும் இதற்கு ஆதரவு தருவார்கள் என்றும் நாடாளு மன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் உள்ள...

(முலதாம் பக்கத் தொடர்ச்சி)

கனடா நாட்டினர் தாக்கு தலுக்கு உள்ளாக்கப்படலாம்

கனடாவுக்கு எதிராக எதிர் மறை உணர்வுப்பூர்வ கருத் துக்கள் சமூக வலைத்தளங் களில் உலா வருகின்றன. கனடா எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் உள்ளிட்ட ஆர்ப்பாட்டங்கள் நடைபெறலாம்.

ஒருவேளை கனடா நாட்டினர் தாக்கு தலுக்கு உள்ளாக்கப்படலாம். எனவே டெல்லியில் அறிமுகம் இல்லாத நபர்களிடம் இருந்து ஒதுங்கியிருக்கவும். தனிப்பட்ட தகவல்களை அவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டாம்.

மும்பை, சண்டிகர், பெங்களூரு ஆகிய நகரங்களிலும் கவனமாக இருக்க வேண்டும். ஏதாவது உதவி தேவைப்பட் டால் கனடா நாட்டினர் டெல்லியில் உள்ள தூதர அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

கனடா - இந்தியா உறவில் விரிசல்

மேலும் பிக்பாக்கெட், சிறிய காயம் போன்ற சம்பவங்கள் பொதுவானது. குற்றவாளிகள் வெளிநாட்டினரை இலக்காக வைத்து தாக்கலாம். குறிப்பாக முக்கிய நகரங்கள் மற்றும் சுற்றுலாப் பகுதிகளில் இதுபோன்று நடக்கலாம் என எச்சரித்துள்ளது.

காலிஸ்தான் செயல்பாட்டாளர் நிஜ்ஜார் கொல்லப்பட்ட சம்பவத்தில் கனடா, இந்திய புலனாய்வு அமைப்பு மீது குற்றம் சுமத்தியதை அடுத்து கனடா - இந்தியா இடையிலான உறவில் விரி சல் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

இந்தியாவில்...

(முலதாம் பக்கத் தொடர்ச்சி)

கனடா குற்றம்சாட்டியது. அதோடு இந்திய உயர் தூதர் அதிகாரியை வெளியேற உத்தரவிட்டது.

இதற்கு பதிலடியாக இந்தியாவில் உள்ள கனடா நாட்டின் தூதருக்கு சம்மன் அனுப்பிய மத்திய அரசு, தூதர்களை வெளியேற்ற உத்தரவிட்டது. இதனால் இரு நாடுகளுக்கு இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டது. இந்த நிலையில் இந்தியாவில் உள்ள கனடா தூதரகத்தில் இருந்து அதிகாரிகள், அவர்களது குடும் பத்தினர் உள்ளிட்ட 41 பேரை கனடா திரும்பப் பெற்றுள்ளது. இந்த தகவலை வெளியுறவுத்துறை அமைச்சர் மெலானி ஜோலி தெரிவித்துள்ளார்.

மேலும் இந்தியாவில் இருந்து பாது காப்பாக வெளியேற நாங்கள் அனைத்து வசதிகளையும் செய்துள்ளோம் என்று கூறிய அவர், இதற்கான அர்த்தம் எங் களுடைய அதிகாரிகள் மற்றும் அவரது குடும்பத்தினர்கள் தற்போது வெளி யேறி விட்டனர் எனவும் தெரிவித்துள் ளார்.

41 பேரின் தூதருக்கான விலக்கு திரும்பப் பெறுவது இதுவரையும் இல் லாத ஒன்று. மேலும், சர்வதேச சட்டத்தை மீறுவதாகும். இருந்தாலும், பழிக்குப்பழி நடவடிக்கையில் இறங்கும் எண்ணம் கனடாவிற்கு இல்லை. கனடா தொடர்ந்து சர்வதேச சட்டத்தை பாதுகாக்கும் வகை யில் தொடரும் என்றும் அவர் தெரிவித் துள்ளார்.

புதியகுரல்
எம்மை தொடர்பு கொள்ள: கலாநிதி பஹத் ஏ.மஜீத்
பிரதம ஆசிரியர், நிறுவுனர்
தொலைபேசி: +1437 329 1144
மின்னஞ்சல்: puthiyakuralcanada@gmail.com
புதிய குரல் நியுஸ்பேபர் பப்ளிகேசன் எல்.எல்.சி

1981 இல் யாழ் பொதுநூலகம், ஈழநாடு பத்திரிகைக் காரியாலயம் ஆகியவை எரிக்கப்பட்ட நாளில் இருந்து கருத்துச் சுதந்திரம் இலங்கைத்தீவில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியே வருகின்றது

நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு (Prevention of Terrorism Act -PTA) மாற்றாக உருவாக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் (Anti-Terrorism Act - ATA) பற்றிய நகல் வரைபும், நிகழ் நிலைக்காப்புச் சட்டம் பற்றிய வரைபும் ஒரே நேரத்தில் வாத்தமானியில் வெளியிடப்பட்டுள்ளமைதான் இங்கு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த மாதம் 15, 18 ஆம் திகதிகளில் குறித்த இரண்டு வரைபுகளும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதைக் கண்டித்துள்ள இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம், அரசாங்கம் உடனடியாக இதனை விலக்கிக் கொள்ள வேண்டும் என்றும் கடும் தொனியில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழ் - முஸ்லிம் மக்கள் எவ்வாறான பாதிப்புகளை எதிர்கொள்வர் என்றும் கடந்த முப்பது வருடப் போரில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தினால் தமிழர்கள் எதிர்கொண்ட விளைவுகள் பற்றியும் இந்த இரண்டு வரைபுகளையும் எதிர்ப்போர் கவனத்தில் எடுத்துப் பரிசீலிக்க வேண்டும்.

தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கும் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மேற்படி இரண்டு நகல் சட்ட வரைபுகளுக்கும் இடையே பாரிய வேறுபாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை.

1981 இல் யாழ் பொதுநூலகம், ஈழநாடு பத்திரிகைக் காரியாலயம் ஆகியவை எரிக்கப்பட்ட நாளில் இருந்து கருத்துச் சுதந்திரம் இலங்கைத்தீவில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியே வருகின்றது.

இருந்தாலும் 2023 செப்ரெம்பரில் முன்மொழியப்பட்டுள்ள நிகழ் நிலைக்காப்புச் சட்டம் பற்றிய வரைபு கருத்துச் சுதந்திரத்திற்கும் மாற்றுக் கருத்துக்களை முன்வைப்போரையும் சமகால அரசியல் நோக்கில் நேரடியாகக் குறிவைத்துள்ளது.

இதன் விதிகள் பின்வருமாறு

1) இணையப் பாதுகாப்புக்கான நிகழ் நிலைக்காப்புச் சட்டத்தின் செயலாக்கத்தை மேற்பார்வையிடவும் அதன் தீங்குகள் பற்றிய முறைப்பாடுகளை விசாரணை செய்யவும் ஐந்துபேரைக் கொண்ட இணையப் பாதுகாப்பு ஆணைக்குழு (Online Safety Commission) ஒன்றை நியமித்தல்.

2) முறைப்பாடுகளின் அடிப்படையில் இணைய சேவை வழங்குநர்கள் (Internet Service Providers - ISPs) தங்கள் தளங்களில் இருந்து தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கத்தை அகற்றுதல்.

3) இணையத்தளச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தவும் நிறுத்தவும் அதற்குரிய அறிவுறுத்தல்களை இணையச் சேவை வழங்குநர்களுக்கு (ISPs) உத்தரவிடவும் இணையப் பாதுகாப்பு ஆணைக் குழுவுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

4) குறித்த விதிகளுக்குக் கட்டுப்படாத இணைய சேவை வழங்குநர்கள் (ISPs) மற்றும் சமூக ஊடக நிறுவனங்களுக்கு அபராதம் விதிக்கும் அதிகாரம் இந்த ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே இந்த நான்கு விதிகளும் கருத்துச் சுதந்திரத்துக்குக் குறிப்பாக ஊடகச் செயற்பாடுகளுக்கு ஆபத்து என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

ஆணைக்குழுவின் தீர்ப்புக்கு எதிராகவோ அல்லது அறிவுறுத்தல்களுக்கு (Instructions) எதிராகவோ இணைய சேவை வழங்குநகர்கள் மற்றும் பயனாளிகள் எவருமே நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க முடியாது.

தீங்கிழைக்கப்பட்டுள்ளதாகக் கிடைக்கபெறும் முறைப்பாடுகளை ஆராயும் சரியான வழிமுறைகள் பற்றிய விடயங்கள் நகல் வரைபின் உள்ளடக்கத்தில் தெளிவாக விபரிக்கப்படவில்லை.

ஆகவே இது முறையான மற்றும் தீங்கு விளைவிக்காத ஊடகச் செயற்பாடுகளுக்கும், தீங்கு விளைவிக்காத சமூகவலைத்தள கருத்துச் சுதந்திரத்தையும் இது தணிக்கை (Censorship) செய்யும் என்ற அச்சம் உண்டு.

இணையப் பாதுகாப்பு ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள கூடுதலான அதிகாரம் இந்த நகல் வரைபில் தெளிவாகக் காணப்படுகின்றது. இது சாத்தியமான தவறான பயன்பாடு மற்றும் எதிர்ப்பை அடக்குதல் பற்றிய கவலைகளை ஊடக மற்றும் சமூகவலைத்தளச் செயற்பாட்டாளர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் மத்தியில் தோற்றுவித்துள்ளது.

செப்ரெம்பரில் முன்மொழியப்பட்டுள்ள நிகழ் நிலைக்காப்புச் சட்டம் வரைபு கருத்துச் சுதந்திரத்திற்கும் மாற்றுக் கருத்துக்களை முன்வைப்போரையும் சமகால அரசியல் நோக்கில் நேரடியாகக் குறிவைத்துள்ளது.

முஹமது நபி (ஸல்) பிழையாக சித்தரித்து பேசிய இந்திக்கவுக்கு கடும் நிபந்தனையின் கீழ் பிணை

நபிகளாரின் 172 சம்பவங்களை நீதவானுக்கு கூறிய முஸ்லிம் சட்டத்தரணிகள்!

ஒரு புலன் குறைந்தவர் என்பதால் இந்திக்க தொட்டவத்த அறியாமல் பேசிவிடுவார் என இந்திக்கதொட்டவத்தவத்தவின் சட்டதரணிகள் தெரிவித்து அனைவரிடமும் தமது வருத்தத்தை தெரிவித்தனர். கடும் நிபந்தனையின் அடிப்படையில் இந்திக்க தொட்டவத்தவுக்கு பிணை

முஹம்மத் நபி (ஸல்) மற்றும் இஸ்லாம் மார்க்கம் சம்மந்தமாக பொய்யான கருத்துக்களை கூறி மிகவும் கீழ்த்தரமான இழிவான கருத்துக்களை யூடூப் தளத்தில் பதிவிட்டமைகைகாக இந்திக்க தொட்டவத்தவை கடந்த ஒக்டோபர் மாதம் 6ம் திகதி கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய போது 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்த நீதவான் கட்டளையிட்டிருந்தார்..

இன்று -20- அவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது கணனி குற்றத்தடுப்பு பிரிவினர் இந்தத் தவறை ஐஊஊஸீசு சட்டத்தின் கீழ் பதிவு செய்வதா,இல்லையா என சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து இன்னும் ஆலோசணை கிடைக்கவில்லையென்றும், அதுவரையில் சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாரும் நீதவானிடம் சமர்ப்பணம் செய்தனர்.

அதன் பின் இவ் வழக்கில் முஸ்லிம் சமூகத்தின் முறை ப்பாட்டாளர்கள் சார்பாக ஆஜராகிய சிரேஷ்ட சட்டதரணி சிராஸ் நூர்தீன் , சிரேஷ்ட சட்டதரணிகளான. மஹாஸ் யூசுப்,முஹம்மத் அன்வர், மற்றும் பசான் வீரசிங்க ,எம்.கே.எம். பர்ஸான் ஆகியோர் ஆஜராகினர் தமது சமர்ப்பணத்தை நீதவான் லோச்சனா விக்கரமசிங்ஹ அவர்கள் முன்னிலையில் எடுத்துரைத்தனர்.

இதன்போது" இந்திக்க தொட்டவத்தைக்கு பிணை வழங்குவதை நாம் எதிர்க்கவில்லை. ஆனால் இவர் எல்லா மதங்களையும் மிகவும் கேவளமாக இழிவுபடுத்தக்கூடியவர் எனக்கூறி, அது சம்மந்தமான ஆதரங்களை முன்வைத்து இவருக்கு சாதரணமாக பிணைவழங்காமல் நிபந்தனையுடன் கூடிய பிணை வழங்க வேண்டும் என்றும், இனி இவர் இது போன்று மதத்தை நிந்திக்கும் வகையில் பேசினால் அவரது பிணை ரத்து செய்ப்பட்டு கைது செய்யப்பட வேண்டும் எனவும் அவர் தான் கூறிய வார்த்தைகளுக்காக தனது வருத்தத்தை தெரிவிக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டு இஸ்லாத்தில் நபியவர்கள் எதிரிகளுடன் எவ்வாறு நடந்து கொண்டார்கள், எவ்வாரு எதிரிகளுக்கு மன்னிப்பளித்தார்கள் என்பது சம்பந்தமான 172 சம்பவங்களை சமர்ப்பணம் செய்து அதில் பல சந்தர்ப்பங்களையும் நீதவான் முன்னிலையில் சுட்டிகாட்டினர்.

மேலும் இவ்வாறான பேச்சுக்கள் மூலம் மக்கள் தூண்டப்பட்டு, தவறான முடிவுகளை எடுப்பார்கள் என்றும் இது போன்ற நடவடிக்கைகளுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் மக்களுக்கு நாட்டில் சட்ட ஒழுங்கு மீதுள்ள நம்பிக்கை இல்லாது போய்விடும் என்றும் சுட்டிக்காட்டினர்.

அதன் பின் இந்திக்க தொட்டவத்த சார்பில் சிரேஷ்ட சட்டதரணி உபுல் குமாரப்பெரும, சுசன்த தொடவத்த உட்பட 4 சட்டதரணிகள் முஸ்லிம் முறைப்பாட்டாளர்கள் தரப்பு சட்டத்தரணிகள் குலாம் முன்வைத்த வாதத்தை தாம் ஏற்பதாகவும், தமது சேவை நாடுரனாரால் ஏற்பட்ட தவறுக்காக அனைவரிடமும் தமது வருத்தத்தை தெரிவித்துக் கொள்வதாகவும் குறிப்பிட்டனர்.

மேலும் இந்திக்க தொட்டவத்தவுக்கு ஐந்து புலன்களும் இல்லை என்றும், நான்கு புலன்களை மட்டுமேயுடையவரென்றும் அதனால் அவரை அறியாமல் சில விடயங்களை பேசி விடுவார் என்றும் இந்திக்க தொட்டவத்தவின் சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்..

இருபக்க வாத விவாதங்களையும் செவிமடுத்த நீதவான் லோச்சனா வீரசிங்க முஸ்லிம் சமூக முறைப்பாட்டாளர்கள் சார்பான சட்டதரணிகள் பாராட்டத்தக்க முறையில் நடந்து கொண்டனர் என்று சுட்டிக்காட்டியதோடு, இந்திக்க தொட்டவத்த ஒரு புலன் குறைந்தவர் என்ற விடயம் ஒருபோதும் அவருக்கு மன்னிப்பாக அமைய மாட்டாது என்றும், அவருக்கு அவ்வாறான பிரச்சினை இருந்தால் அதாவது தன்னை கட்டுப்படுத்தி பேச முடியாவிட்டால் அவர் இவ்வாறான மதம்சார்ந்த விடயங்களை பொது வெளியில் பேசாமல் தவிர்க்க வேண்டும் என்றும், ஒரு தனிநபரின் செயற்பாட்டுக்காக முழு நாடும் பிரச்சினையை எதிர் நோக்கவிட முடியாது என்றும் குறிப்பிட்டார்.

மேலும் மதம் சம்மந்தமான வாத விவாதங்கள் செய்வதென்றாலும் கௌரவமான முறையில் செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மேலும் இந்திக்க தொட்டவத்த இனிமேல் இவ்வாறான கீழ்த்தரமான,இழிவான பேச்சுக்களை பொது வெளியில் பேசக்கூடாது என்றும் எச்சந்நர்ப்பத்திலேனும் அவ்வாரு பேசினால் பிணை நிபந்தனையை மீறியதன் அடிப்படையில் மீண்டும் கைது செய்யப்படுவாரென்றும், கடுமையான நிபந்தனையுடன் பிணை நீதவான் அவர்கள் நிபந்தனையுடன் கூடிய பிணையை வழங்கினார். அடுத்த வழக்கு ஜனவரி மாதம் 19ம் திகதி நடைபெறும்.

பலஸ்தீனியர்களுக்காக யாழ்ப்பாணத்தில் இன்று போராட்டம்



சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் ஏற்பாட்டில் 21.10.2023 காலை 10 மணியளவில் யாழ் மத்திய பேரூந்து நிலையத்திற்கு முன்பாக இப் போராட்டம் இடம்பெற்றது.

இஸ்ரேலின் தொடர்ச்சியான நில ஆக்கிரமிப்பினால் பலஸ்தீன மக்கள் மேற்கு கரையிலும் காசாவிலும் சுருக்கப்பட்டுள்ளனர்.

இஸ்ரேல் அரசாங்கத்தினதும் அதன் மேற்குலக கூட்டாளி நாடுகளினதும் அரசியல் பொருளாதார நலன்களுக்காக காசா மக்கள் பலியாக்கப்பட்டு வருகின்றனர். குறிப்பாக குழந்தைகளும், பெண்களும் அதிகமாகக் கொல்லப்பட்டுள்ளனர்.

இத்தகைய மக்களுக்கு எதிரான கொடூர தாக்குதலைக் கண்டிக்கின்றோம் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவித்தனர்.

“மலையகத் தமிழர்களின் 200 ஆண்டுகள் துயரம்” கருத்தரங்கிற்கு தமிழ்நாடு அரசின் அனுமதி மறுப்பு

ஜனநாயகப் பண்பற்ற நடவடிக்கை என்கிறது நாடு கடந்த தமிழீழ அரசு

ரொரன்டோ, ஒக்.29

இலங்கைத் தீவிலுள்ள தமிழர்களின் அவலநிலையை தமிழ் நாட்டிலுள்ள தமிழர்கள் விவாதிப்பதற்கான அரசியல் வெளியை மறுப்பது பேச்சுச் சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்துக்கான உரிமைகளை மீறுகிறது.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் தமிழ்நாட்டு உறுப்பினர்களால் ஒழுங்கமைக்கப்பட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த “இலங்கைத் தீவில் மலையகத் தமிழர்களின் 200 ஆண்டுகள் துயரம்” எனத் தலைப்பிடப் பட்ட நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் கருத்தரங்கிற்கு தமிழ்நாடு அரசின் அனுமதி மறுப்பை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கண்டிக்கிறது. இந்த ஜனநாயகப் பண்பற்ற செயலானது, பேச்சுச் சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடும் சுதந்திரம் ஆகிய உரிமைகளையும் மீறுகிறது. மகாத்மா காந்தி குறிப்பிட்டது போன்று. “மனிதன் ஒருவனது சுதந்திரத்திற்கு, சுவாசிப்பதற்கு ஒக்சிசனைப் போன்று, பேச்சுச் சுதந்திரம் அத்தியாவசியமானது.”

இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் காலனித்துவநாடாக இருந்த ஐக்கிய இராச்சியம், இந்தியாவின் தமிழ்நாட்டிலிருந்து தமிழர்களை இலங்கைத் தீவில் முதலில் கோப்பித் தோட்டங்களிலும், பின்னர் தேயிலைத் தோட்டங்களிலும் வேலை செய்வதற்குகொண்டு வந்தபோது அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுமென உறுதியளித்தது. 1948ஆம்ஆண்டு முதல், சுதந்திரத்தைத் தொடர்ந்து உடனடியாக சிறீலங்கா அரசாங்கமானது 1948 சிலோன் குடியுரிமைச் சட்டம், 1949 இந்திய பாகிஸ்தானிய வசிப்பிட குடியுரிமைச் சட்டம்,1949 சிலோன் பாராளுமன்ற தேர்தல்கள் சட்டம் மூலம் 10 மில்லியன் மலையகத் தமிழர்களின் வாக்குரிமையைப் பறித்து, அவர்களை நாடற்றவர்களாக்கி ஐக்கிய இராச்சியம் மலையகத் தமிழர்களுக்கு கொடுத்த உறுதிமொழியை இலங்கை புறந்தள்ளியது. 1958, 1977, 1981, 1983ஆம் ஆண்டுகளில் மலையகத் தமிழர்கள் இனப்படுகொலைகளுக்கு உள்ளாகியதுடன், இனவன்முறையின் இலக்காகக் காணப்பட்டனர். இன்றை வரைக்கும் இலங்கைத் தீவில் பொருளாதாரத்தை மேம்படுத்துகின்ற வருமானத்தை அளிக்கும் தொழிற்துறையாகவுள்ள இலங்கைத் தீவில் தேயிலைத்தொழிற்துறையின் முதுகெலும்பாகவுள்ள இலங்கைத் தீவிலுள்ள மலையகத் தமிழர்களின் சமூகப்பொருளாதார மற்றும் வசிப்பிட நிலைகள் மனிதநிலைக்கு கீழ்ப்பட்டவையாக உள்ளன.

இலங்கைத் தீவிலுள்ள மலையகத் தமிழர்களின் வாழ்வுகளை உயர்த்துவதற்கான வழிகள் மற்றும்வழிவகைகளை விவாதிப்பதையே நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் கருத்தரங்கு நோக்காகக் கொண்டிருந்தது. கருத்தரங்கானது ஓய்வு பெற்றதமிழ்நாடு நீதிபதி அரிபரந்தாமனால் தலைமை தாங்கப்படவிருந்தது. உறுதிப்படுத்தப்பட்டபேச்சாளர்களில், அனைத்திந்திய மக்கள் சிவில் உரிமைகள் சங்கத்தின் செயலாளர் எஸ். சுரேஷ், திரைப்பட இயக்குநர் திரு.கோபிநயினார், நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் சென்ட் சபை உறுப்பினர் பேராசிரியர் சரஸ்வதி, தமிழ்நாடுசட்டசபை உறுப்பினர் திரு.எஸ்.எஸ்.பாலாஜி, கொங்கு இளைஞர் சங்கத்தின் தலைவர் திரு. உ.தனியரசு (முன்னாள் எம்.எஸ்.ஏ), சிரேஷ்ட வழக்கறிஞர், சென்னை உயர் நீதிமன்றம்திரு.சங்கரசுப்பு, , தமிழ் வழக்கறிஞர் சங்கத்தின் வழக்கறிஞர் டி.எம்.ஜான்சன், நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் தமிழ் நாட்டு உறுப்பினர்கள், ஏனைய தமிழ் நாட்டைத் தளமாகக் கொண்ட பேச்சாளர்கள் உள்ளடங்கியுள்ளனர்.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் உள்ளரங்க கருத்தரங்கிற்கு அனுமதி மறுத்தமை தொடர்பாகதமிழ்நாடு பொலிஸ் அதிகாரிகள், எழுத்தில் ஒன்றரை மாதங்களுக்கு முன் நாடுகடந்த தமிழீழஅரசாங்கம் கோரிய அனுமதியின் மறுப்புக்கான எவ்வித காரணத்தையும் இன்று வரை தெரிவித்திருக்கவில்லை.

ஜனநாயக ஆட்சியின் அச்சு சட்டவாட்சி. கருத்தரங்கின் மீதான தடையானது, பேச்சுச் சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடும் சுதந்திரத்தின் பாரியமீற லொன்றாகும். தவிர, இலங்கைத் தீவிலுள்ளதமிழர்களின் அவலநிலையை விவாதிக்க மற்றும்அவர்களுக்கு உதவும் வழிகளை ஆராய்வதற்கான தமிழ் நாட்டிலுள்ள 60 மில்லியன் தமிழர்களின்அரசியல் வெளியையும் இது மறுக்கிறது.

இந்தியாவில் தமிழீழ விடுதலைப் புலிகளின்தடையை நீடிப்பு தொடர்புடைய சட்ட நடவடிக்கைகளில் 2019ஆம் ஆண்டில் நாடுகடந்ததமிழீழ அரசாங்கம், துதமிழீழ விடுதலைப் புலிகள்மீதான தடையானது இந்தியாவில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியல் செயற்பாடுகளில் பாதிப்பை ஏற்படுத்துகின்றதென நாடுகடந்ததமிழீழ அரசாங்கம் வாதிட்டிருந்தது. இந்தியஅரசாங்கத்தின் நிலைப்பாட்டின் அடிப்படையில், இந்தியாவில் அரசியல் செயற்பாடுகளில்நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் ஈடுபடுவதில் எவ்விதசட்டரீதியான தடையுமில்லையென தீர்ப்பாயம் குறிப்பிட்டிருந்தது.



“மலையகத் தமிழர்களின் 200 ஆண்டுகள் துயரம்” கருத்தரங்கு மீதான தமிழ்நாடு அரடின் அனுமதிமறுப்பை, இந்திய நீதித்துறையில் சட்ட ரீதியாக சவாலுக்குட்படுத்துவதற்கான தயார்ப்படுத்தல்களை நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் தமிழ்நாடு உறுப்பினர்கள், த.தமிழினியன், த.முகேஷ், கோ.பாவேந்தன், பேராசிரியர் சரஸ்வதி ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

கனடாவில் பிக்கரிங் நகரில் எழுந்தருளியிருக்கும் பிக்கரிங் அருள்ஜோதி சிவனாலயத்தில் இடம்பெற்ற விஜயதசமி விழா



ரொரன்டோ, ஒக்.29

கனடாவில் பிக்கரிங் நகரில் எழுந்தருளியிருக்கும் பிக்கரிங் அருள்ஜோதி சிவனாலயம் 1400 Bayly St Unit 13B, Pickering, ON L1W 3R2 என்னும் விலாசத்தில் இயங்கிவருகின்றது.

இங்கு கடந்த புதன்கிழமையன்று நடைபெற்ற நான்காம் நாள் விஜயதசமி விழா சிறப்பாக நடைபெற்றது.

விசேட பூசைகள் மற்றும் அபிசேகங்கள் ஆகியன இடம்பெற்று வசந்த மண்டபப் பூசையும் இடம்பெற்றது. தொடர்ந்து திருமதி ஜனனி ரவிசங்கர் ஆசிரியையின் சக்தி நர்த்தனாலய மாணவிகள் வழங்கிய பரத நாட்டியம் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து பிக்கரிங் சிவனாலய கலா மன்றத்தின் குருவும் ஸ்தாபகருமான திருமதி சௌமியா ரவிகுமாரின் மாணவிகள் வாய்ப்பாட்டு நிகழ்ச்சியை நடத்தினார்கள்.

இரண்டு கலை நிகழ்வுகளுமே சிறப்பாக நடைபெற்றன.

ஆலயத்தின் பிரதம குருக்கள் அவர்கள் கலை நிகழ்ச்சிகளை வழங்கிய ஆசிரியைகளையும் மாணவிகளையும் கௌரவிக்கும் வகையில் சான்றிதழ்களை வழங்கினார்கள்.

ஆலயத்தின் தொலைபேசி இலக்கம் :-(647) 989-6943



கனடா பாரதி கலா மன்றமும் ‘வித்யா பாரதி – கனடா அமைப்பும்” இணைந்து நடத்திய ‘வித்யா பாரதி கலைச்சேவை” விருது விழா

ரொரன்டோ, ஒக்.29

கடந்த 15-10-2023 ஞாயிற்றுக்கிழமையன்று ஈற்றோபிக்கோ நகரில் கனடா பாரதி கலா மன்றமும் “வித்யா பாரதி- கனடா அமைப்பும் இணைந்து நடத்திய “வித்யா பாரதி கலைச்சேவை விருது விழா சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி விருதுகள் வழங்கும் விழாவில் கனடாவில் கலைச்சேவை ஆற்றியவரும் இசையாசிரியர்கள் மற்றும் நடன ஆசிரியைகள் போன்ற பலர் கௌரவிக்கப்பெற்றனர்.

அவர்களின் இளம் கலைச்சேவை விருது திருமதி நிவேதா இராமலிங்கம் என்னும் நடன ஆசிரியைக்கு வழங்கப்பெற்றது. இந்த விருதியை தொழிலதிபர் கணேசர் சுகுமார் அவர்கள் தனது மறைந்த துணைவியார் ஷீலா சுகுமார் அவர்களின் ஞாபகார்த்தமாக அவருக்கு



வழங்கினார்.

இந்த விழாவில் தமிழ் மக்கள் மத்தியில் நன்கு அறியப் பெற்றும் கலைஞர்களான திருமதி தனதேவி மித்ரதேவா திருமதி லதா பதா ஆகியோர்க்கும் “வித்யா பாரதி-கலைச்சேவை விருதுகள் வழங்கப்பெற்றன.

இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்.

கனடா விவகாரம்; இந்தியாவுக்கு எதிராக திரும்பிய அமெரிக்கா, இங்கிலாந்து!

ரொரன்டோ, ஒக்.29

இந்தியாவிலிருந்து கனடா மேலும் 41 தூதர்களை வெளியேற்றியுள்ள நிலையில், அமெரிக்கா, இங்கிலாந்து என்பன கனடாவின் செயலுக்கு வரவேற்பளித்துள்ளன.

சீக்கியர் படுகொலை

கனடாவில் காலிஸ்தான் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் படுகொலை செய்யப்பட்ட விவகாரம் கனடா - இந்தியா இடையே பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. தொடர்ந்து இரு நாடுகளில் இருந்தும் பரஸ்பரம் தூதர்கள் வெளியேற்றம் மற்றும் தூதரக விசா நிறுத்தம் என அடுத்தடுத்த நடவடிக்கைகளால் பரபரப்பு ஏற்பட்டன.

இந்த நிலையில், இந்தியாவில் உள்ள தூதர்கள் இருப்பை குறைத்து கொள்ளும்படி இந்தியா வலியுறுத்தி இருந்தது. இந்தியாவின் இந்த வேண்டுகோளுக்கு ஏற்ப கனடா அரசும் தன்னுடைய தூதர்களில் 41 பேரை நேற்று திரும்ப பெற்றது.

அதேவேளை காலிஸ்தானியர் படுகொலை விவகாரத்தில், மேற்கத்திய நாடுகள் வெளிப்படையாக இந்தியாவுக்கு கண்டனம் தெரிவிக்க தயக்கம் காட்டுகிறது. எனினும் , இங்கிலாந்துடன் சேர்ந்து, கனடாவின் சீக்கியர் படுகொலை விசாரணைக்கு இந்தியா ஒத்துழைக்க வேண்டும் என நாங்கள் வலியுறுத்துகிறோம் என்று அமெரிக்கா தெரிவித்து உள்ளது.

இந்நிலையில் இங்கிலாந்து வெளியுறவு அலுவலகம் வெளியிட்ட செய்தியில், இந்தியாவில் இருந்து எண்ணற்ற கனடா தூதர்கள் வெளியேறுவது என்ற இந்திய அரசின் முடிவுகளுடன் நாங்கள் ஒத்து போகவில்லை என்று தெரிவித்து இருந்தது.

ஆசியாவில் முக்கிய எதிரி நாடாக பார்க்கப்படும் சீனாவை எதிர்கொள்ள சரியான நாடு என்ற வகையில், இந்தியா உடனான உறவு பாதிக்கப்பட, அமெரிக்காவோ மற்றும் இங்கிலாந்தோ விரும்புவதில்லை. இந்நிலையில் கனடா விவகாரத்தில் இரு நாடுகளும் இந்தியாவுக்கு எதிராக திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கனடாவில் இலங்கை பெண் கொலை வழக்கில் கணவன் குற்றவாளி: நடுவர் மன்றம் உறுதி!

ரொரன்டோ, ஒக்.29

கனடாவின் ஒன்ராறியோவில் இலங்கை பெண்மணி ஒருவர் துப்பாக்கியால் சுட்டு கொல்லப்பட்ட வழக்கில், அவர் கணவன் உட்பட மூவர் குற்றவாளி என ரொறன்ரோ நடுவர் நீதிமன்றம் கண்டறிந்துள்ளது.

தொடர்புடைய சம்பவம் ஸ்கார்பரோ பகுதியில் கடந்த 2020 மார்ச் மாதம் நடந்துள்ளது. இந்த வழக்கின் விசாரணை வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட நிலையில் 38 வயதான தீபா சீவரத்தினம் கொலையில் மூவர் குற்றவாளி என உறுதி செய்யப்பட்டுள்ளது.

இரண்டு பிள்ளைகளுக்கு தாயாரான தீபா சீவரத்தினம் துப்பாக்கியால் பலமுறை சுடப்பட்டு ஸ்கார்பரோ பகுதியில் அமைந்துள்ள அவரது குடியிருப்பின் முற்றத்தில் சடலமாக கிடந்தார்.

சம்பவத்தன்று, மார்ச் 13ம் திகதி கொலைகாரன் வீட்டின் அழைப்பு மணியை அழுத்தவும் தீபாவின் தாயார் லீலாவதி சீவரத்தினம் கதவை திறந்துள்ளார். அவரும் துப்பாக்கி குண்டுக்கு இலக்காக, சிகிச்சைக்கு பின்னர் உயிர் தப்பினார்.

இந்த வழக்கில் தீபாவின் கணவர் விஜேந்திரன் பாலசுப்ரமணியம் மீது கொலைக் குற்றம் சுமத்தப்பட்டது. இந்த நிலையில், இரண்டு நாட்கள் விசாரணைக்கு பின்னர், விஜேந்திரன் பாலசுப்ரமணியம் தான் இந்த கொலைக்கு திட்ட மிட்டதும் செயல்படுத்தியதும் என நடுவர் நீதிமன்றம் வெள்ளிக்கிழமை உறுதி செய்துள்ளது.

விசாரணையில், தமது மனைவியை கொல்லும் பொருட்டு ஞவநயனடநல முநசச என்ற வாடகை கொலையாளியை விஜேந்திரன் பாலசுப்ரமணியம் ஏற்பாடு செய்துள்ளதும் கண்டறியப்பட்டது.

வெள்ளிக்கிழமை அந்த நபர் மீதும் முதல் நிலை கொலை வழக்கு உறுதி செய்யப்பட்டுள்ளது. மூன்றாவதாக, Steadley Kerr என்பவரின் நண்பர் புயசல ஞயஅரநட என்பரும் குற்றவாளி என நடுவர் நீதிமன்றத்தால் குறிப்பிடப்பட்டுள்ளார்.

Gary Samuel என்பவருக்கும் இந்த கொலைக்கும் தொடர்பு இல்லை எனவும், அவர் வெறும் வாகன சாரதி மட்டுமே என்றும் அவர் தரப்பு சட்டத்தரணிகள் வாதிட்டுள்ளனர்.

ஆனால் இந்த இருவருமே கொலைக்கு திட்டமிட்டதும், வாகனம் ஒன்றை வாடகைக்கு அமர்த்தியதும் என அரசு தரப்பில் அம்பலப்படுத்தியுள்ளனர். இவர்கள் மூவருக்குமான தண்டனை மிக விரைவில் அறிவிக்கப்படும் என நீதிமன்றம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடிய படையினருக்கு ஏற்பட்டுள்ள துர்பாக்கிய நிலை!



ரொரன்டோ, ஒக். 29

கனடாவில் ராணுவப் படையினர் மத்தியில் கடுமையான வறுமை நிலவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அநேகமான படையினர் தங்களது வாழ்க்கைச் செலவுகளை ஈடு செய்ய முடியாது அவதியறுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தங்களது தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக அதிக எண்ணிக்கையிலான படையினர் உதவிகள் கோரி நிற்கும் நிலை காணப்படுவதாக பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் Wayne Eyre தெரிவித்துள்ளார்.

லாப நோக்கமற்ற நிறுவனங்கள் அதிக எண்ணிக்கையில் படையினருக்கு உதவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

சில படையினர் குறிப்பிட்ட சில பகுதிகளில் சேவையாற்றுவதற்கு விரும்புவதில்லை என தெரிவிக்கப்படுகிறது.

தற்பொழுது வழங்கப்படும் வீட்டு கொடுப்பனவு போதுமான தாக இல்லை என படையினர் தெரிவிக்கின்றனர்.

சம்பளத்தின் அடிப்படையில் வீட்டுக் கொடுப்பனவு வழங்கப்படுவதாகவும் சேவையில் நிறுத்தப்பட்டுள்ள பிரதேசத்தின் அடிப்படையிலேயே இந்த கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதிக எண்ணிக்கையிலான படையினர் வீட்டு பிரச்சனையினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும், கனடாவில் ராணுவத்தில் ஆளணி வள பற்றாக்குறை நிலவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.



கனடாவின் பல்வேறு பகுதிகளிலும்

போராட்டங்கள்!

ரொரன்டோ, ஒக்.29

கனடாவின் பல்வேறு இடங்களில் பலஸ்தீன போராளிகளுக்கு ஆதரவாகவும் இஸ்ரேலுக்கு ஆதரவாகவும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

டொரன்டோ, கல்கரி, வான்குவர், வினனிபெக், ஹாலிபெக்ஸ் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இந்த பேரணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக நாட்டின் பல்வேறு இடங்களில் இவ்வாறு ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பேரணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பாலஸ்தீனத்தை விடுதலை செய் என்ற கோஷத்துடன் இந்த போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

டொரன்டோவில் அமைதியான முறையில் பல்லாயிரக் கணக்கான பங்கேற்பாளர்களின் பங்கேற்புடன் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதேவிதமாக இஸ்ரேலிய படையினருக்கு ஆதரவை வெளிப்படுத்தும் வகையிலும் போராட்டங்கள் பேரணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நாட்டின் பல்வேறு இடங்களிலும் இஸ்ரேலிய படையினரை ஆதரித்து போராட்டங்கள் மற்றும் பேரணிகள் நடத்தப்பட்டிருந்தன.

இஸ்ரேலில் கொல்லப்பட்ட இரண்டு கனடியர்கள்!



ரொரன்டோ, ஒக். 29

அண்மையில் ஹமாஸ் போராளிகள் இஸ்ரேல் மீது மேற்கொண்ட தாக்குதல்களில் கொல்லப்பட்ட இரண்டு கனடியர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட உள்ளது.

இஸ்ரேலில் நடைபெற்ற இசை நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றிருந்த வேளையில், ஹமாஸ் போராளிகள் மேற்கொண்ட தாக்குதல்களில் இரண்டு கனியர்கள் உயிரிழந்தனர்.

வான்கூவாரைச் சேர்ந்த 22 வயதான பென் மிஸ்ராஜி மற்றும் ஒன்றாரியோவைச் சேர்ந்த 33 வயதான அலெக்சாண்டர் லுக் ஆகிய இருவரும் இவ்வாறு உயிரிழந்திருந்தனர்.

இஸ்ரேலில் கொல்லப்பட்ட இந்த இரண்டு கனடியர்களுக்காகவும் நினைவஞ்சலி நிகழ்வுகள் நடத்தப்பட உள்ளது.

கனடாவில் இந்த அஞ்சலி நிகழ்வுகள் நடத்தப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் பலஸ்தீன போரில் பாதிக்கப்பட்ட கனடியர்களின் விபரங்கள் இன்னமும் முழுமையாக வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேலில் சிக்கியுள்ள கனடியர்களை மீள அழைத்து வர நடவடிக்கை!

ரொரன்டோ, ஒக். 29

இஸ்ரேலில் தங்கியுள்ள கனடியர்கள் நாட்டுக்கு மீள அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடிய வெளிவிவகார அமைச்சர் மெலெனி ஜோலி இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

விமான மூலம் இவ்வாறு கனடியர்கள் அழைத்து வரப்பட உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலுக்கும் ஹமாஸ் படையினருக்கும் இடையிலான மோதல்கள் உக்கிரமடைந்து வரும் பின்னணியில் அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் நாட்களில் தெல் அவீவிலிருந்து கனடியர்கள் அழைத்து வரப்பட உள்ளதாக தெரிவித்துள்ளார்.

கனடிய ராணுவத்திற்கு சொந்தமான விமானங்களின் மூலம் இந்த மீட்பு நடவடிக்கையை முன்னெடுக்கப்பட உள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

விமான நிலையத்திற்கு செல்ல முடியாத கனடியர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு வேறு வழிமுறைகள் குறித்து ஆராயப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

கனடிய பிரஜைகள் கனடிய நிரந்தர வதிவிடவுரிமையாளர்கள் ஆகியோர் மற்றும் அவர்களது குடும்பத்தினர் இவ்வாறு மீள அழைத்து வரப்பட உள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இஸ்ரேலில் தங்கியுள்ள கனடியர்கள் +1-613-996-8885 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தங்களை பதிவு செய்து கொள்ளுமாறு கோரியுள்ளார்.

மேலும் கனடியர்கள், இஸ்ரேலில் தங்களது நடமாட்டத்தை வரையறுத்துக் கொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

எனினும் காஸா பிராந்தியத்தில் தங்கியுள்ள கனடியர்கள் தொடர்பில் எவ்வித தகவல்களையும் வெளிவகார அமைச்சர் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.





திருகோணமலையில் நிரந்தர நியமனம் கோரி சிற்றூழியர்கள் கவனயீர்ப்பு போராட்டம்

திருகோணமலை, ஒக்.29

கிழக்கு மாகாண தற்காலிக ஒப்பந்த அமைய ஊழியர்கள் ஒன்றியத்தினால் நிரந்தர நியமனம் பெற்றுக்கொள்ளும் நோக்கில் கிழக்கு மாகாணத்தில் பணிபுரியும் ஊழியர்கள் திருகோண மலையில் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

குறித்த போராட்டமானது திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண முதலமைச்சின் அலுவலக முன்றலில் ஆரம்பித்து பேரணியாக கிழக்கு மாகாண ஆளுனர் அலுவல கத்தை நோக்கி சென்றனர். உள்ளூராட்சி மன்றங்களில் பணிபுரியும் ஊழியர்களை நிரந்தரமாக்கக் கோரியே இந்த கவன யீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.

நிரந்தர நியமனம் வேண்டும், குறைந்த ஊதியம் பெறும் எங்களை நிரந்தர நியமனம் செய் உள்ளிட்ட வாசகங்களை ஏந்தியவாறும் கவன யீப்ர்பில் ஈடுபட்டார்கள். தற்காலிகமாக பணியாற்றும் ஊழியர்களை நிரந்தர மாக்குதல் தொடர்பில் அரசாங்கத்தி னால் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இது வரை நிரந்தர நியமனம் செய்யப் படவில்லை எனவே பல முறை உரிய வர்களுக்கு இது தொடர்பில் கோரிக்கை விடுத்தும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை எனவே நிரந்தர நியமனத்தை பெற்றுத் தாருங்கள் எனவும் கவனயீர்ப்பில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இதில் கிழக்கு மாகாணத்தை சேர்ந்த பல ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

தற்காலிக ஊழியர்களுக்கு மத்திய அரசின் ஊடாக நிரந்த நியமனம் வழங்குவதே நியாயமானது

மட்டக்களப்பு, ஒக்.29

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் தற்காலிகமாக கடமையாற்றும் ஊழியர்களுக்கு மத்திய அரசின் ஊடாக நிரந்த நியமனம் வழங்கு வதே நியாயமானது என கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் தற்காலிகமாக கடமையாற்றும் ஊழியர்களின் கவனயீர்ப்பு போராட்டத்தின் ஊடாக நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநரிடம் கோரிக்கை முன்வைத்தனர்.

இது குறித்து ஆளுநர் அலுவலகம் கருத்து தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் தற்காலிகமாக கடமையாற்றும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனத்தை வழங்குவது தொடர்பில் அண்மையில் பிரதமருடன் விசேட கலந்துரை யாடலொன்று கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் முன்னெடுக்கப்பட்டிருந்தது.



இதன் போது அமைச்சரவை பத்திரம் ஊடாக நிய மனங்கள் வழங்குவதற்கான அனுமதி பெற்று தரு வதாக பிரதமர் ஆளுநரிடம் உறுதியளித்திருந்தார்.

இலங்கை பொறியியல் சேவையின் விசேட தரத்திற்கு பதவி உயர்வு பெற்றார் பொறியியலாளர் யூ.எஸ்.ஏ.நாஸர்

மட்டக்களப்பு, ஒக்.29

கிழக்கு மாகாண நீர்ப்பாசன பணிப்பாளராக கடமையாற் றிய மாளிகைக்காட்டு பிரதே சத்தை சேர்ந்த பொறியியலா ளர் யூ. எல். ஏ. நஸார் இலங்கை பொறியியல் சேவையின் விசேட தரத்திற்குப் பதவியுயர்வு பெற்று பொது நிர்வாக, உள்நாட்டலு வல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச் சின் தொழிநுட்பம் பிரிவின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழ கத்தில் பொறியியல் விஞ்ஞான மானி பட்டத்தை சிவில் துறை யில் பெற்ற இவர் இலங்கைப் பொறியியலாளர் நிறுவனத்தின் பட்டயப் பொறியியலாளர் ஆவார். இலக்கை பொறியியல் சேவையில் 26 வருட காலத்திற்கு மேலான சேவை அனுபவத் தினை கொண்ட பொறியிய



லாளர் யூ.எல்.ஏ. நஸார் நிர்மாண முகாமைத்துவத்தில் பட்டப்பின் படிப்பினை மேற் கொண்டவராவார்.

கல்முனை உவெஸ்லி உயர் தரப் பாடசாலையில் கல்வி கற்ற இவர் கிழக்கு மாகாணத் தில் நீர்ப்பாசனத் துறை அபி விருத்திற்கு அயராத முயற்சியு டன் பணியாற்றியவர் என்பது டன் விவசாய அபிவிருத்தி மூலம் கிராமிய மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்த முழு முயற்சிகளையும் அர்ப் பணித்தவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இளைய தலைமுறையினர் ஊடகத்துறைக்கு பிரவேசிக்க பங்காற்றியவர் மர்ஹூம் நமாஸ்

அனுதாபச் செய்தியில் முஸ்லிம் மீடியா போரம்

புத்தளம், ஒக்.29

புத்தளம் மாவட்டத் தின் மூத்த ஊடகவியலா ளரும் சிரேஷ்ட ஆசிரி யருமான அல்ஹாஜ் ஏ. இஸட். நமாஸ் புத்தளம் மாவட்டத்தின் குறிப் பாக ஊடகத்துறையின் அபிவிருத்திக்கும் புதிய ஊடகவியலாளர்களை உருவாக்குவதிலும் முக்கிய பங்காற்றியவர் என சிறிலங்கா முஸ்லிம் மீடியா போரம் விடுத் துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

போரத்தின் தலைவர் என்.எம். அமீன் விடுத் துள்ள அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது,

சிறிலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் மாவட்ட இணைப் பாளராகவும் செயற்குழு உறுப் பினராகவும் நீண்ட காலம் பணிபுந்த நமாஸ், குறிப்பாக இளைய தலைமுறையினர் ஊடகத்துறைக்குப் பிர வேசிப் பதற்கு பெரும் பங்காற்றினார். முத்தெழில் என்ற பத்திரி கையை ஆரம்பித்து அதனூ டாக இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் பயிற்சியை வழங்கினார்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான நமாஸின் இழப்பு குடும்பத்துக்கு மட்டுமன்றி, ஊடகத்துறை க்கும் பெரும் வெற்றிடத்தை ஏற்படுத்தியுள் ளது. ஆசிரியராக, ஊடக வியலாளராக, சமூக செயற்பாட்டாளராக நமாஸ் ஆற்றிய பங்களிப்பு புத்தளம் மக்களது மனதில் என்றும் பதிந்திருக்கின்றது என்று நம்புகிறோம். லேக் ஹவுஸ் தினகரன் பத்திரிகையில்



செய்தியாளராக தனது பணியை ஆரம்பித்த இவர், ஊடகப்பயிற்சியாளராகவும் பணிபுரிந்து இளைஞர்களையும் யுவதிகளையும் பயிற்றுவிப் பதில் முக்கிய பங்காற்றினார். சிறிலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் மூலம் புத்தளம் ஊடகவியலாளர்களுக்கு தேவையான வளங்களைப் பெற்றுக் கொள்வதிலும் பயிற்சிகளை வழங்குவதிலும் முன்னோடியாகச் செயற்பட் டார்.

பிரதேச சிங்கள, தமிழ் ஊட கவியலாளர்கள் இணைந்து நல்லிணக்கத்தை ஏற்படுத்து வதில் நமாஸ் ஆற்றிய பங்களிப்பு அலாதியானது.

இவரது மறைவானது பிரதேசத்திற்கு வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது. அன்னாரின் பாவங்களை மன்னித்து அன்னாருக்கு ஜன்னத்துல் பிர்தௌஸை வழங்குவானாக! என்றும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

ஹலால் எதிர்ப்பு முதல் ஈஸ்டர் வரை

பஹத் ஏ.மஜீத் எழுதும் ஊடகங்களில் வராத உண்மைகள்



பொதுபலசேனாவும் முஸ்லிம் எதிர்ப்பும்

‘பஞ்சாயத்து முறை’

சிங்கள மக்கள் மத்தியில் ஊர் பிணக்குகளை தீர்ப்பதற்காக காணப்பட்ட பஞ்சாயத்து நடைமுறைகளுள் ஒன்றான ‘பன்சல பஞ்சாயத்து’ இன்றும் பின்தங்கிய கிராமப் புற சிங்களப்பகுதிகளில் காணப் படுகிறது. இது விகாரைகளில் தான் செயற்படுத்தப்படுகிறது. குடும்பச் சண்டைகள் முதல் ஊர் சண்டை வரை இங்கு விசாரிக்கப்பட்டு தீர்த்து வைக்கப்படுவதோடு மீறுகிற சந்தர்ப்பத்திலேதான் பொலிஸ் நிலையங்களுக்கோ அல்லது நீதிமன்றங்களுக்கோ வழக்குகள் செல்லுகிறது. குறிப்பாக இலங் கையின் தென்மாகாணத்தில் காணப்படும் கிராமங்களில் இருக்கும் விகாரைகளில் அதிகமாக இந்த பஞ்சாயத்து முறைமைகள் காணப்படுகிறது. நாட்டில் சிங்கள மக்கள் வாழ்கின்ற ஏனைய பின் தங்கிய கிராமப்புற விகாரைகளிலும் இந்த நடைமுறை காணப்படு கிறது.

பௌத்தம் ஒரு மதமல்ல, புத்தர் ஒரு தூதருமல்ல. இது மனிதன் மனிதனாக வாழ்கின்ற முறையினை தெளிவாக சொல் கின்றது. புத்தர் இந்த வழி காட்டியினை வாழ்ந்துகாட்டிய வர் இதனாலையே இவரை கைகூப்பி மண்டியிட்டு வணங்குகின்றனர், பௌத் தத்தை பின்பற்றுகின்றவர் களுக்கு கொள்கைகள் மார்க்க வழிமுறைகள் ஒன்றுமில்லை, இது வெளிப்படையாக தெரி யாவிட்டாலும் இதுதான் உண் மையும் கூட, நல்ல பழக்கங் களை சொல்லிக்காட்டிய வாழ்ந்து காட்டிய மகான் தான் கௌதம புத்தர்.

மரணத்தின் பின்னரான வாழ்க்கை, மார்க்க சட்டங்கள் என்பன இல்லாமலே இவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார் கள். அதிலும் குறிப்பாக இலங் கையில் வாழும் பௌத்தர் களுள் மிகவும் பின்தங்கியுள்ள வர்களே கிராமங்களில் வாழ்ந்து வருகின்றனர், மத்திய மாகாணங்களில் வாழும் பௌத்தர்கள் மன்னர் பரம்பரை ஆகையால் இவர்களுக்கென்று தனியான வழிமுறைகளை பின் பற்றி பௌத்தர்களில் உயர்ந்த வர்களாக காட்டிக்கொள்கிறார் கள்.

‘மஹாயான பௌத்தர்கள்’

பின்தங்கிய கிராமங்களில் வாழும் பௌத்தர்கள் அதாவது தென்மாகாணத்தில் அதிகப்படி யான மஹாயான பௌத்தர்கள் வாழ்கின்றனர், மாற்றுமத சகோ தரர்களை வேற்றுக் கண் கொண்டு பார்ப்பது குணம் இவர்களிடம் அதிகமாக காணப் படுவதாக ‘டிராக்’ என்று சொல்லப்படும் ஒரு சர்வதேச அமைப்பு கூறுகிறது.

இப்பகுதியில் உள்ள அதா வது மஹாநாம பௌத்தர்கள் வாழும் பிரதேச விகாரைகளில் தற்காப்புக்கலைகள், ஆயுதப் பயிற்சி (வாள் வெட்டு, அம்பு எறிதல்) போன்ற விடயங்கள் சொல்லிக்கொடுக்கப்படுகிறது. இது பாரம்பரிய வழிமுறையும் கூட அடிப்படையில் திட காத்திரம் கொண்ட இவர்கள் தீவிர பௌத்த போக்கு கொண் டவர்களாக காணப்படுகின்ற னர். இவர்களுக்குள் இருக்கும் ஒற்றுமை, பிக்குகளை உன்னத மாய் மதிக்கும் குணங்கள் இவர் களை இன்னும் பௌத்தத் தினை அதிகமாக பின்பற்று வதற்கு வழிகோலியாக அமைந்துவிடுகிறது.

இந்த அடிப்படையில் இலங்கையில் பல அமைப்புகள் காலத்திற்கு காலம் ஆரம்பிக்கப் பட்டு இல்லாமல் போன அமைப்புக்கள் ஒருபுறமிருக்க மஹாநாம பௌத்தர்களின் சார்பாக அமைப்புக்கள் இல்லா மைமேலே விகாராதிபதிகளினால் ஒரு வட்டத்திற்குள் தள்ளப் பட்ட அடிப்படைவாத சிங்கள பௌத்தர்கள் வெளியில் வர தயங்கினார்கள், கண்டிய கொள்கைளுக்கும் பிக்குமார் களின் நெறியாழ்கைகளுக்கும் கட்டுபட்டு வாழ்ந்து வந்தனர்.

‘யார் இந்த ஞானசார தேரர்’

மஹாயான பௌத்த வம் சத்தை சேர்ந்த களுத்துறையில் ஒரு பின்தங்கிய குடும்பத்தில் 1975ம் ஆண்டு மார்ச் மாதம் 4ம் திகதி பிறந்த ஞானசார தன்னை ஆரம்பத்திலிருந்து சிங்கள பௌத்தத்தை காப்பாற்றும் ஒரு பிக்குவாக காட்டிக்கொள்ளும் அளவிற்கு தன்னுடைய நட வடிக்கைகளை மாற்றிக்கொண் டார். பஞ்சாயத்து முறைகளில் தலையிடுவது சிறிய சிறிய அமைப்புக்களை ஒன்றாக்கி வலயமைப்புக்களை பெரி தாக்குவதில் வல்லவர் ஆனார். தன்னுடைய படிப்பினை வெளிநாடுகளில் மெருகூட்டிய ஞானசார இலங்கையின் அடிப் படைவாத சிங்கள பௌத் தப்போக்குள்ள முக்கிய தன வந்தர்களை இனம் கண்டு கொண்டார், அவர்களை தன் வலையில் முடக்கி சாதனை புரிந்தார்.

‘ஞானசாரவுக்கு எதிரியான முஸ்லிம்கள்’

இலங்கையில் பௌத்த மத்தினை பாதுகாக்க வேண் டும் என்று எண்ணிய காலப் பகுதியில் தலைதூக்கிய ‘தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆதிக்கம்’ சிங்கள பௌத்தர் களை கோபத்திற்குள்ளாக் கியது, தமிழீழ விடுதலைப்புலி களுக்கு முஸ்லிம்கள் சில சந் தர்ப்பங்களில் தஞ்சம் கொடுத்த அல்லது காட்டிக்கொடுக்கா மல் விட்டதை மிகவும் கோப மாக பார்த்த அடிப்படைவாத இனவாதிகள் முஸ்லிம்களும் எங்களுக்கு விரோதிகள் தான் என்று முடிவெடுத்தனர். இது ஒரு சில குழுக்கள் எடுத்த முடிவு களாக இருந்தாலும் ஏனைய முஸ்லிம்களை சகோதரர்களாக பார்த்த வரலாறுகள் அதிகம், இந்த எதிரியாக பார்த்த பிக்கு களில் ஞானசாரவும் ஒருவர்.

இதற்கு பலநூறு காரணங் கள் உண்டு, நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட காலப்பகுதியில் வியாபார நோக்கத்திற்காக வந்தவ அரேபிய நாட்டு முஸ் லிம்கள் வலிமையுள்ளவர்களாக வும், வியாபார யுக்தி கொண்ட வர்களாகவும் இருந்த காரணத் தினால் மன்னர்களுக்கும் ஆட்சியாளர்களுக்கும் பிடித் துப்போய்விட்டனர். அக் காலம் தொட்டு இன்றுவரை ஆட்சியாளர்களுக்கு துணை யாக இருந்தவர்கள் முஸ்லிம் கள், அரேபிய முஸ்லிம்கள் சிங்கள பெண்களை மணந் ததின் காரணமாக தங்கள் மார்க் கத்தை தங்கள் பிள்ளைகளுக்கு சொல்லிக்கொடுக்க முடியாமல் தவித்த வேளை சிங்கள மன்னர் களின் உதவியுடன் தமிழகத்தி லிருந்து வந்த தமிழ்பேசும் முஸ்லிம்கள் இலங்கையில் பிறந்த கலப்பு மத இஸ்லா மியர்களுக்கு இஸ்லாத்தை கற்றுக்கொடுத்தனர், இது தான் இன்று கிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம்கள் சரளமாக தமிழ் பேசவும் செய்கின்றனர். இது ஒரு புறமிருக்க முஸ்லிம்கள் பணத்திலும் அறிவிலும் மேலோங்கி காணப்படுவதை னை பொறுத்துக்கொள்ளாத ஞானசார இதனை தடுப்பதற்கு பல வழிகளிலும் உதவிதேடிய வேளை நோர்வே மற்றும் மேலைத்தய கொள்கை நாடுகள் ஞானசாரவிற்கு தீனியாக மாட் டியது.

‘ஜாதிக ஹெல உறுமயவும் பொதுபலசேனாவும் இணைந்துகொண்டது’

அரசியல் செல்வாக்கற்ற பொதுபலசேனா அமைப்பு இலங்கையில் உள்ள பௌத்த மதவாத கட்சியான ஜாதிக ஹெல உறுமயவை நாடி எதிர் கால அரசியலுக்கு தாங்கள் பணஉதவிகள் செய்கிறோம், இந்த நாட்டில் பௌத்த மதத் ததை காப்பாற்ற வேண்டு மென்று மண்டியிட்டபோது மதவாதம் கொண்ட சம்பிக்க ரணவக்கவும், அத்துரலிய ரத்தினதேரரரும் பொதுபல சேனாவுடன் இணைந்து செயற்பட ஆரம்பித்தனர். ஜனாதிபதியுடன் நெருங்கிய உறவுள்ள சம்பிக்க ஜனாதிபதி யுடன் இதுகுறித்து பேச வில்லை அன்று என்பது குறிப்பிடத்தக்கது.

‘ஹலால் எதிர்ப்பும் பள்ளிவாசல் தாக்குதலும்’

பொதுபலசேனா தன்னு டைய முழுப்பலத்தையும் பயன்படுத்தி ஹலால் சான்றி தழை இல்லாமல் செய்தது, இது மாத்திரமின்றி முக்கிய பள்ளிவாசல்களை இடமாற்ற வும் செய்தது.

இது குறித்து விசாரிக்கு மாறு முஸ்லிம் அமைச்சர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஜனாதிபதி பணிப்புரை விடுத்த பொழுது சம்பிக்க ரணவக்க ஜனாதிபதியை தொடர்பு கொண்டு அச்சுறுத்தியுள்ளார் ‘ 5000 பிக்குகள் கைவசம் வைத் துள்ள அமைப்பு பொதுபல சேனா’ இதனுடன் மோதுவதன் மூலமாக இன்னுமொரு பாரிய பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடும்.

இது பௌத்த நாடு பெரும் பான்மை மக்கள் பௌத்தர்கள். பிக்குகள் தீக்குளிக்கவும் தயா ராய் உள்ளனர் நீங்கள் அனு சரித்து போகவேண்டும் என்று கூறினார் சம்பிக்க. பெரும் பான்மை சிங்கள வாக்குகளால் ஜனாதிபதியான மஹிந்த ராஜ பக்ஸ ஒரு கட்டத்தில் பயந்து போனார் இதற்கு கோத்தாபய ராஜபக்ஸவை நாடிய போது அதற்கு முதலே பொதுபல சேனா அமைப்பு கோத்தாபய ராஜபக்ஸவை தொடர்பு கொண்டு தங்கள் பலத்தினை உறுதிப்படுத்தியது. இதற்குப் பிறகு ராஜபக்ஸ அரசு இது குறித்து பேசுவதிலிருந்து தவிர்ந்து கொண்டது, பிரச் சினை வரும் போதெல்லாம் அனுசரித்து பேசிய ஜனாதி பதியும், பாதுகாப்பு செயலரும் முக்கிய கட்டங்களில் முஸ்லிம் அமைச்சர்களுக்கு ஏசியும் தொலைபேசி அழைப்பை துண்டித்தும் உள்ளனர்.

‘தொடர்ச்சியான இனவாத தாக்குதல்’

தம்புள்ள பள்ளிவாசல், கொம்பனித்தெரு பள்ளிவாசல், தெஹிவளை பள்ளிவாசல் என்று நீண்டு கொண்டு சென்ற பள்ளிவாசல் தாக்குதல்கள் இறுதியில் இனக்கலவராமாய் தோற்றமளித்தது. அளுத்கம பற்றியெரிந்து, முஸ்லிம்களின் சொத்துக்கள் சூறையாடப்பட் டது. இவற்றிற்கெல்லாம் இந்த பொதுபலசேனா அமைப்பு தான் காரணம் என்று தெரிந் தும் கூட அமைதிகாத்தது ராஜக்ஸ அரசு, முஸ்லிம் அமைச்சர்கள் களத்திலும் பாராளுமன்றத்திலும் பேசியும் பலனில்லை என்று தெரிந்தும் கூட முஸ்லிம்களை இன்னு மொரு அழிவிலிருந்து பாது காக்க அவருடன் இருக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அமைச்சரவை அந்தஸ்துள்ள முஸ்லிம் அமைச்சர்கள் தவித்தனர் செய்ய வழியின்றி!

‘சமூகவலைத்தளங்களில் பற்றியெரிந்த இனவாதச் சிக் கல்’ ஒருபுறம் சிங்கள சகோத தர்கள் பொதுபலசேனாவிற்கு ஆதரவாகவும், எதிர்த்து பதிவுகளை ஆதாரங்களுடன் பதவிட்டனர். இதே வேளை சமூக வலைத்தளங்கள் மூலம்

கடைத்த தகவல்களை திரிவு படுத்தி செய்திகளை வெளியிட்ட இணையத் தளங்கள் தங்கள் இணையத்தை பிரபலப்படுத்த பேஸ்புக் பக்கத்தின் லைக்குகளை அதிகரிக்க நினைத்தவாறு செய்திகளை பதிவிட்டது. இது சாதக மாய் போனது பொதுபலசேனாவிற்கு, தாங்கள் நினைத்ததை விட அதிகம் பிரபலம் பெற்றனர்.

'நெகடிவ் அப்றோச் மூலம் பிரபலமான அதே வேளை சர்வதேச ஊடகங்களின் வலையில் மாட்டிய ஞானசார'

சமூகவலைத்தளங்களில் பிரபலமான ஞானசார சர்வதேச ஊடகங்கள் கண்ணில்பட்டார், பிரச்சினையில் மாட்டிக்கொண்டார், உலகம் பொது பலசேனாவின் அட்டகாசத்தை திரும் பிப்பார்த்தது. ஆனால் இதனால் பொதுபலசேனா அமைப்பு ஒரு தீவிர வாத அமைப்பாக பார்க்கப்பட்டது.

வுசுயுஊ எனப்படும் அமைப்பு பொதுபலசேனாவை ஒரு தீவிரவாத அமைப்பாக உலகிற்கு அறிமுகப்படுத் தியது. தட்டுத்தடுமாறி பிற்பட்ட காலத்தில் முஸ்லிம்கள் தங்களுக்கு எதிரியல்ல முஸ்லிம் அமைப்புகள் தான் எதரி என்று தட்டிமாறியது பொது பலசேனா,

'ஊடகவியலாளர் மாநாடு நடத்தி ஊடகங்களை கேக் கொடுத்து மடக்கிய ஞானசார'

வாரமொறு ஒரு ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தி செய்திப்பஞ்சமான ஊடகங்களுக்கு இனவாத தீனி போட் டது பொதுலசேனா அமைப்பு, வரும் ஊடகவியலாளர்களுக்கு ரோலஸ்சும், கேக்கும் டீயும் கொடுத்து சிரித்துப் பேசியது. ஒரு சில வேளை கொடுப் பனவுகளும் வழங்கியது. இதுவே அடிக்கடி பொதுபலசேனாவை ஊடகங்கள் தூக்கிப்பிடித்ததற்கு காரணம்.

'முஸ்லிம் மக்களின் கோபத்திற்குள்ளான முஸ்லிம் அமைச்சர்கள்'

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், அதாஉல்லாஹ், ரிசாத் பதியுதீன், பௌசி போன்றோர் காரணம் தெரிந்தும் வெளியில் சொன்னால் இன்னும் முஸ்லிம் மக்களுக்கு ஆபத்து என்று சொல்லாமலே வாய்மூடி மௌனி களாகினர். இதற்கு மஹிந்த பொறுப் பல்ல என்று அமைச்சர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தெரிந்திருந்தும் கூட முஸ்லிம் மக்கள் மத்தியில் நியாயப்படுத்த முடியாமல் தடுமாறிய வேளை மக்களும் மறந்தனர் ஆட்சியாளர்களும் மறந்தனர். ஆனால் இனாவத பிரச்சினைகளை தடுக்கவும் முடியாது அதனை வரவிடாமல் பண்ணிவிடவும் முடியாது இது நியதியும் கூட!

'ராஜபக்ஸ ஆட்சிமீதும் அவர் சகாக்கள் மீதும் கோபம்கொண்ட முஸ்லிம்கள்'



ஏற்கனவே தமிழ் மக்கள் ராஜபக்ஸ அரசாங்கம் மீது கோபம் கொண்டி ருக்கிற அதேவேளை முஸ்லிம்களும் 'பொதுபலசேனா' வின் மூலம் ராஜபக்ஸ மீது கோபம் கொண்டனர். இனி மஹிந்தவை ஆதரிப்பதில்லை என்று முடிவு எடுத்தனர். இந்த சூழ்ச்சி அறியாத மஹிந்த மற்றுமொரு ஜனாதிபதி தேர்தலுக்கு தயரானார்.




'அவசரப்பட்டு தன் பலத்தை சோதித்துப்பார்த்த மஹிந்த'

நாளுக்கு நாள் தனக்கிருக்கும் கிராக்கி குறைந்து செல்லுகிறது என்று எண்ணிய மஹிந்த ராஜபக்ஸ தன்னுடைய வாக் குப்பலத்தை சோதிக்க எண்ணினார். தன்னுடைய சகாக்களுக்கு அதியுச்ச சொகுசினை வழங்கிய ஜனாதிபதி அதன் மூலம் தனக்கிருக்கும் மரியாதை குறை கிறது என்றும் எண்ணினார். இரண்டு வருடம் ஆட்சிக்காலம் மீதமிருந்தும் ஜனாதிபதி தேர்தலுக்கு தயாரானார் மஹிந்த. அமெரிக்காவின் சூழ்ச்சியறி யாமல் பொது பலசேனாவை ஒன்றுமே செய்யாததால் சிங்கள மக்கள் தனக்கே வாக்களிப்பார்கள் என்று நம்பினார், தமிழ் முஸ்லிம் மக்களும் தான் செய்த அபிவிருத்திகளுக்கு வாக்கப்பார்கள் என்று மலையாய் நம்பி தேர்தலை நடாத்த அறிவித்தார்.

'மஹிந்தவுக்கு சவாலாக மைத்திரிபாலவும், சந்திரக்காவும்'

தன்னுடைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் நாயகம் வேட் பாளராகவும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையார் பிரதான பிரச்சாரத்தை முன்னெடுத்தது பெரும்சவாலாக மாறியது. தனது பலம் குறைந்துள்ளதை அறிந்ம மஹிந்த ராஜபக்ஸ அமெரிக்க சூழ்ச்சி குறித்து புலனாய்வு அறிக்கை சமர்ப்பிக்க சொன்னார். நடந்ததை சொன்னது புலனாய்வு அறிக்கை திகைத்துப்போய் முஸ்லிம் தலைவர்களிடம் மன்றாடினார். முஸ்லிம் பிரதேசங்களை அபிவிருத்தி செய்ததற்காக முக்கிய சில அமைச்சர்கள் மஹிந்த ராஜபக்ஸ பக்கமும் இதனை வாய்ப்பாக பயன்படுத்தி பிரபலம் தேடிய ஒரு சில அரசியல் வியாபாரிகள் மைத்திரிபால பக்கமும் சென்றனர். தேர்தல் நடந்தது ஜனாதிபதியானர் மைத்திரிபால சிறீசேன.



'நிறைவேற்று அதிகாரக்குறைப்பு, பாராளுமன்றத்திற்கு அதிகாரம், அமரிக்க பொருளாதார கொள்கை, சிறுபான்மை அரசியல் கட்சிகளின் ஆதிக்கத்தை குறைத்தல் போன்றவை நடந்தேறின'

பாராளுமன்றத்தில் பிரதமருக் கெதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்பட்ட பொழுது பாராளுமன்றம் கலைந்தது, மீண்டும் பொதுத்தேர்தல் ஆகஸ்ட் 17 நடத்த திட்டமிடப்பட்டது.

'நாதியற்ற ஞானசார அரசியல் கட்சியொன்றை பதிவு செய்தார்'

சிங்கள மக்களை தாங்கள் ஒரு பௌத்தத்தை காக்கும் ஒரு அமைப்பு என்று கூறி ஏமாற்றிய பொதுபலசேனா என்ற இனவாத அமைப்பும் அரசியல் கட்சியாய் உருவெடுத்து 'பி.ஜே.பி' என்ற கட்சியை ஆரம்பித்தது இப்படி மத வாதம் பேசி இறுதியில் மக்கள் மத்தியில் பிரபலமடைந்து அரசியல் கட்சியாக உருவெடுப்பது ஒன்றும் இலங்கை அரசி யல் வரலாற்றிற்கு புதிதல்ல. கள்வர்கள் தங்கள் களவுகளை மறைக்க கட்சி தொடங்குவதும் பாராளுமன்றம் செல்வது நமக்கு பழக்கபட்ட விடயமும் கூட. மஹிந்த கெட்டவருமல்ல ரணில் நல்லவருமல்ல எல்லாம் ஒரு குட்டையில் ஊறிய மட்டைகளே.

தொடரும்

மயிலத்துமடு விவகாரம் உடனடியாக தீர்வு வழங்க ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்பு



கொழும்பு, ஒக்.29

மயிலதமடு, மாதவனை கால்நடைவளர்ப்பு பண்ணை யாளர்கள் தமது மேய்ச்சல் தரை காணிகளில் தனியார் ஆக்கிரமிப்புகள் இடம்பெற் பிரச்சினை தொடர்பில் ஜனா திபதி ரணில் விக்ரமசிங்க தலை மையில் ஜனாதிபதி செயலகத் தில் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலில் கிழக்கு மாகாண ஆளுநர் செந் தில் தொண்டமான், ஜனாதி பதியின் செயலாளர், ஆளுங் கட்சி அமைச்சர்கள், பாராளு மன்ற உறுப்பினர்கள், அரச அதிபர்,மகாவலி னுபு, பொலிஸ்மா அதிபர் மற்றும் வனவிலங்கு அதிகாரிகள் ஆகி யோர் கலந்துகொண்டனர்.

விவசாயம் மற்றும் கால் நடைவளர்ப்பு என்பன இந்த நாட்டின் முதுகெலும்பாகும். இவை இரண்டும் பாதுகாக் துள்ளதாக கடந்த சில மாதங் களாக குற்றச்சாட்டுகள் முன் வைத்துவரும் நிலையில், இந்த கப்பட வேண்டும்.

வெளிமாவட்டங்களில் இருந்து வந்து மட்டக்களப்பு மயிலதமடுவில் விவசாயம் மேற்கொள்பவர்களுக்கு அவர் களை பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்டங்களிலேயே விவ சாயம் மேற்கொள்ள மாற்று இட ஒதுக்கீடுகள் வழங்க அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

இவ்வாறு மாற்று இடங்கள் வழங்குவதன் ஊடாக பண்ணை யாளர்கள், விவசாயிகள் என இருத்தரபினருடைய பிரச்சி னைகளும் முடிவுக்கு வரும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும் பண்ணையாளர் களின் பிரச்சினைகள் முடிவுக்கு வரும் வரை கால்நடைகளுக்கு உணவுகளை வழங்க தேவை யான உதவி தொகைகளை வழங்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

சாய்ந்தமருது கடலரிப்பை கட்டுப்படுத்தும் பணிகளை துரிதப்படுத்த நடவடிக்கை

மேலதிக பணிப்பாளர் நாயகம் உறுதியளிப்பு



கல்முறை, ஒக். 29

சாய்ந்தமருது பிரதேசத்தின் கடலரிப்பை கட்டுப்படுத்த 07 தடுப்பணைகள் அமைக்கும் பணிகளுக்கான விலைமனு கோரும் நடவடிக்கைகள் முற்றுப்பெற்று விலைமனுக்கள் திறக்கப்பட்டு அடுத்த சில நாட்களில் பொருத்தமான ஒப்பந்தக்காரர்களை கொண்டு கட்டுமான நடவடிக்கை ஆரம்பிக்கவுள்ளதாகவும், ஒரு வாரத்தில் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்க உள்ளதாக கரை யோரம் பேணல் மற்றும் கரையோர மூல வள முகாமை திணைக்கள மேலதிக பணிப் பாளர் நாயகம் பொறியியலா ளர் திருமதி எல்.டி .ரூனஹே தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட சாய்ந்தமருது, மாளிகைக்காடு, கல்முனை கரையோர பிரதேசங்கள் கடலரிப்புக்கு இலக்காகி ஆபத்தான நிலை யில் இருக்கிறது. இது தொடர்பில் துரித நடவடிக்கை எடுத்து கரையோரத்தை பாது காக்கும் அவசியம் தொடர்பில் கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்கள மேலதிக பணிப்பாளர் நாயகத்திற்கும், பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச். எம்.எம் ஹரீஸ் கிடையிலான சந்திப்பு இன்று கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமை திணைக் களத்தில் இடம்பெற்றது.

இதன்போது கரையோர பிரதேசங்கள் பாதிக்கப்பட் டுள்ள விடயங்கள் தொடர்பில் காணொளி மற்றும் புகைப் படங்களை கொண்டு திணைக்கள பணிப்பாளருக்கு விளக்கிய பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச். எம்.எம் ஹரீஸ், கரையோர பிரதேசம் உள்ளமை தொடர் பில் முழுமையாக விளக் கினார்.

நிலைமைகளை கேட்டறிந்த கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகா மைத்துவ திணைக்கள மேலதிக பணிப்பாளர் நாயகம் அண் மையில் பாராளுமன்ற கட்டிட தொகுதியில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் கடலரிப்பை காட்டுப்படுத்த அவசர நடவடிக்கை எடுப்ப தாக பாராளுமன்ற உறுப்பின ருக்கு உறுதியளித்தார்.

இந்த கலந்துரையாடலில் கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகா மைத்துவ திணைக்கள உயர் அதிகாரிகள் கலந்து கொண் டிருந்தனர்.

இலங்கை மூலதன சந்தையின் முக்கிய உந்து சக்தி பொருளாதார வளர்ச்சியும் நிரந்தர அபிவிருத்தியும்

பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர்

அம்பாறை, ஒக்.29

இலங்கை பங்குப்பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் கொழும்பு பங்கு பரிவர்த்தனை (CSE) இணைந்து மூலதனச் சந்தை திறந்த போட்டிச் சமரினை நாடுதழுவிய பல்கலைக்கழக ரீதியில் நடாத்தி வருகிறது. அந்த வகையில் இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழக பிரதான கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் இடம் பெற்ற பீடங்களுக்கிடையிலான மூலதனச்சந்தை திறந்த வினா விடைப்போட்டிச் சமர் 2023 நிகழ்வில் ஐந்து பீடங்களைச் சேர்ந்த மாணவர்கள் பங்கு கொண்டனர். இதில் கலை கலாச்சார பீடம் முதலாம் இரண்டாம் இடங்களை தனதாக்கிக் கொண்டது.

பேராசிரியர் ஏ.எம்.எம். முஸ்தபா அவர்களின் தலைமையில், முகாமைத்துவ பீட நிதியியல் பிரிவு விரிவுரையாளர் எம்.சிறாஜி அவர்களின் ஒருங்கிணைப்பிலும் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் அவர்கள் கலந்து கொண்டார்.

கௌரவ அதிதிகளாக இலங்கை பங்குபரி வர்த்தணை ஆணைக்குழு சார்பாக நிரோஷன் விஜேசுந்தர (Senior Vice President- Marketing, CSE) அவர்களும், சஜீவனி பக்மெடினிய (Senior manager, Capital Market Education, SEC) அவர்களும், நிமல் குமாரசிங்க - Manager, External Relations , ஆர்.எம். சிவநாதன் - Manager, Batticaloa Branch ஆகியோரும் பங்கு கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்வு பல்கலைக்கழக பீடாதிபதிகள், பேராசிரியர்கள், பதிவாளர், நிதியாளர், கல்வி சார் மற்றும் கல்வி சாரா ஊழியர்கள், மாணவர்கள் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.

நிகழ்வின் வரவேற்பு உரையை பேராசிரியர் ஏ. எம்.எம்.முஸ்தபா நிகழ்த்தினார். அறிமுக உரை கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தின் சிரேஷ்ட உப தலைவர் நிரோஷன் விஜேசுந்தர நிகழ்த்தினார். அவ் உரையில் இலங்கை பொரு ளாதாரத்தில் பங்கு பரிவர்த்தனை நிலையத்தின் பங்களிப்பு மற்றும் போட்டி தொடர்பான விதிமுறை என்பன விளக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பிரதம அதிதி உரையை இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் அவர் களால் நிகழ்த்தப்பட்டது.

அவர் தனது உரையில்,

இலங்கை மூலதன சந்தையானது எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் நிரந்தர அபிவிருத்தியின் முக்கிய உந்து சக்தியாக அமை வதுடன், இன்றைய இளைஞர் சமூகம் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் மூலதன சந்தை தொடர்பான அறிவு மற்றும் போட்டி



சந்தை ஆய்வு தொடர்பான பல தகவல்களை வழங்குகின்றமை எமது தேசத்திற்கு மிக முக்கிய மான பங்ககளிப்பாகும்.

அந்தவகையில் இலங்கை பங்குபரிவர்த்தனை ஆணைக்குழு (SEC) மற்றும் கொழும்பு பங்கு பரிவர்த்தனை (CSE) இணைந்து நடாத்தப்படும் திறந்த வினா விடை போட்டி சமர் நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழகங்களில் ரீதியில் நடாத்து வது தற்போதைய பொருளாதார நெருக்கடியில் எமது நாட்டின் மாணவர் சமுதாயத்தின் அறிவு, திறன் விருத்திக்கு மிக முக்கியமான பங்ககளிப் பாகும், என தனது உரையில் குறிப்பிட்டார்.

அதன் பின்னர் பீடங்களுக்கிடையிலான மூலதனச்சந்தை திறந்த போட்டிச் சமர் இடம் பெற்றது. மேலும் இந் நிகழ்வானது பீடங்களுக் கிடையிலான 15 குழுக்களுக்கிடையில் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் முதலாம் இடத்தை கலை மற்றும் கலாச்சார பீடத்தின் பொருளியல் துறை அணிகள் முதலாம், இரண்டாம் இடத்தினை பெற்றுக் கொண்டதுடன் ரூபா 75000/- பணப்பரிசு மற்றும் சான்றிதழ்களையும் பெற்றுக்கொண்டது.

மூன்றாம் இடத்தினை தொழில்நுட்ப பீடம் பெற்றுக் கொண்டது. மேலும் தெரிவு செய்யப் பட்ட 20 பார்வையாளர்களுக்கான பரிசும் வழங்கிவைக்கப்பட்டது. அத்துடன் குறித்த திறந்த போட்டியில் வெற்றி பெற்ற முதல் அணி தேசிய ரீதியில் பல்கலைக்கழகங்களுக்கிடை யிலான இலங்கை பங்கு பரிவர்த்தனை நடாத்தும் மூலதனச் சந்தை திறந்த வினாவிடைப் போட் டிக்கு தெரிவுசெய்யப்பட்டமை சிறப்பம்சமாகும்.

மேலும் இப்போட்டியானது மாணவர்களுக் கிடையில் மூலதனச் சந்தை தொடர்பான அறிவு அத்தோடு நிதி, பொருளாதாரம், பொழுது போக்கு, விளையாட்டு ரீதியான அறிவினை மேம் படுத்தவும், விருத்தி செய்யவும் இத் திறந்தபோட்டி பிரதான பங்கு வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

அறிமுகமில்லாதவர்களின் நட்பு கைத்தொலைபேசிப் பாவனை மீது நாம் கவனமாக இருக்கவேண்டும்

நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா தெரிவிப்பு



அம்பாறை, ஒக்.29

ஆசிரியர்கள் மேய்ப்பாளர்கள் என்ற அடிப்படையில் என்றும் இறைவனிடத்தில் தங்களுடைய கடமைக்கு பொறுப்புச் சுமத்தப்பட்டு பொறுப்பு கூறுகின்றவர்களாக இருக்கின்றார்கள். ஆசிரியர்கள் மாணவர்களை வழிப்படுத்த வேண்டிய கடப்பாட்டில் இருக்கின்றார்கள் அந்த மேய்ப்புப் பணியிலிருந்து ஆசிரியர்கள் தவறிவிட முடியாது. ஆனால் இன்று தமது கடமையைச் சரியாகச் செய்கின்ற ஆசிரியர்கள் கூட சமூகத்தில் பல்வேறு பிரச்சினைகளையும், இன்னல்களையும் எதிர்கொள்கின்றனர் மாணவர்கள் ஆசிரியர்களுடைய வழிப்படுத்தலை உதாசினம் செய்வதனாலேயே பல்வேறு பிரச்சினைகள் எழுகின்றன என அக்கரைப்பற்று மாவட்ட நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா தெரிவித்தார்.

அக்கரைப்பற்று ஆயிஸா பாலிகா மகா வித்தியாலயத்தில் பெரா சரிட்டி நிறுவனத்தின் ஏற்பாட்டில் "நற்பிரஜைகளாவோம்" எனும் தொனிப்பொருளான நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் திருமதி ஹாறுதீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நீதிபதி ஹம்ஸா தொடர்ந்து உரையாற்றுகையில், ஆசிரியர்கள் மாணவர்களை நோக்கி கூறுகின்ற அறிவுரைகளை உள்வாங்காமல் வேறு சூழ்நிலை காரணங்களால் தூண்டப்பட்டு கல்வி நோக்கைவிட்டு வழி தவறிச் சென்று கொண்டிருக்கிறார்கள் இதனால் நல்ல நிலையில் இருக்கின்ற மாணவர்களும் இச்சிக்கலுக்குள் அகப்பட்டுக் கொள்கின்ற துர்ப்பாக்கிய நிலை தற்போழுது எழுந்துள்ளது. மாணவர்கள் கூடுதலான நேரத்தை ஆசிரியர்களுடன் பாடசாலையில் கழிக்கின்றார்கள் அந்த நேரப்பகுதியில் சட்டத்தின் பார்வையில் மாணவர்களின் பராமரிப்பும், கட்டுக்காவலும் ஆசிரியர்களிடத்திலும், அதிபரிடத்திலும் ஒப்படைக்கப்படுகின்றது இதனால் மாணவர்கள் மீது முழுப்பொறுப்பையும் கொண்டுள்ள ஆசிரியர்கள் பாடசாலையில் அவர்களை வளப்படுத்த வேண்டிய கடமையை புரிந்தேயாக வேண்டும் அண்மைக்காலமாக ஆசிரியர்கள், மாணவர்கள் தொடர்பான சிறுசிறு பிணக்குகளும், வழக்குகளும் நீதிமன்றத்திற்கு அங்கங்கே வந்துகொண்டே இருக்கின்றன. அதிலும் ஆசிரியர் மாணவனைத் தாக்கினார், மாணவன் ஆசிரியரைத் தாக்கினார் மற்றும் பாடசாலைகளில் ஏற்படுகின்ற மோதல்கள் என்பன நீதிமன்றம் வரை வருவது நாங்கள் எங்களை சுய பரிசோதனை செய்து எங்களை மாற்றிக்கொள்ள வேண்டிய விடயமாகும். ஸ்மாட் கைப்பேசிப் பாவனைகள் அதிகரித்துள்ளமையால் வருகின்றன பிரச்சினைகளும் தற்காலத்தில் அதிகரித்து காணப்படுகின்றது விசாரிக்கின்ற போது மாணவர்களும், மாணவிகளும் தெரிவிக்கின்ற கருத்துக்களை பார்க்கின்றவேளை வியப்பாக விருக்கின்றது.

எனது பார்வையில் மாணவர்கள் மத்தியில் தொலைபேசிப் பாவனை தடை செய்யப்பட்ட ஒரு விடயமாகக் காணப்படுகின்றது. கொரோனா காலத்தில் மாணவர்களுக்கு கற்பிக்க வேறுவழியில்லாத சந்தர்ப்பத்தில் கைத்தொலை பேசிகள் கூம் இணையவழி கற்பித்தலுக்காக பயன்படுத்தப்பட்டன. இதனால் பயனடைந்த மாணவர்கள் இருந்தாலும் வழி கெட்டுப்போன மாணவர்கள் தான் அதிகம். அன்பான மாணவர்களே! நீங்கள் கைத்தொலை பேசிப் பாவனையை விட்டும் முற்றாக விலகியிருங்கள். கைத்தொலைபேசி உங்களது வயது டன் நோக்கும் போது விரும் பத்தகாததொன்று அதனால் மாணவர்களடைந்த நன்மைகளை விட தீமைகளே அதிகம்.

படிக்கின்ற காலத்தில் மனதில் இலட்சியங்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அந்த இலட்சியத்தை அடைந்து கொள்ளக்கூடிய வாய்ப்புக்களை இனங்கண்டு அதனை நோக்கி நகரவேண்டும் பல அறிஞர்களைப்பற்றி பேசுகின்ற போது அவர்கள் தங்களது இலட்சியங்களை அடைந்து கொள்ள எடுத்துக்கொண்ட முயற்சிகளையும், அவர்கள் நிகழ்த்திய சாதனைகளையு மறிந்து அவ்வாறே நமது இலட்சியங்களை வெல்ல முயற்சி செய்து அதற்கமைய செயற்பட வேண்டும். நமது இலட்சியங்களை மறந்து வேறு சிந்தனைகளிலும் வீண் செயற்பாடுகளிலும் ஈடுபடுவதிலிருந்து நாம் தவிர்ந்து கொள்ள வேண்டும். பொருத்தமற்றவர்களுடனான தொடர்பு அறிமுகமில்லாதவர்களுடைய நட்பு மற்றும் கைத்தொலைபேசிப் பாவனை போன்றவற்றின் மீது நாம் கவனமாக இருக்க வேண்டும்.

நாம் சமூதாயத்தின் நல்ல நிலையை அடைந்து கொள்ள முன்மாதிரியானவர்களுடைய செயற்பாடுகளை பின்பற்றி நடக்க வேண்டும் இன்று பல துறைகளில் பெண்கள் சாதனை படைத்திருக்கிறார்கள். சமூதாயத்தில் உயர்ந்த அந்தஸ்திலிருக்கிறார்கள் இதுபோன்றே நாமும் இலட்சியத்துடன் பயணிக்கின்ற போது நமக்கு எதுவும் தடையாகவிருக்க முடியாது. இலக்கு நோக்கி பயணிக்கையில் நிச்சயம் வெற்றி கிடைக்கும் அதனால்தான் "இலட்சியமில்லாத வாழ்வு அச்சாணியில்லாத தேருக்கு ஒப்பானதாகும்" யானையின் பலம் அதன் தும்பிக்கையில் மனிதனின் பலம் அவர்களின் நம்பிக்கையில் என்பார்கள் இலட்சியமும் நம்பிக்கையுமில்லாத மனிதன் நடைப்பிணத்திற்கு ஒப்பான வன் ஆகவே விடாமுயற்சியுடன் செயற்படுவீர்களானால் உங்களுடைய சமூதாயத்தை நீங்களே மாற்றியமைக்கக்கூடிய வல்லமையை நீங்கள் பெறுவீர்கள்.

சில நாடுகளில் நற்பிரஜைகளை உருவாக்க கைத்தொலை பேசிப் பாவனையை மாணவர்கள் மத்தியில் முற்றாக தடை செய்திருக்கிறார்கள். காதல் என்ற தோறணையில் பசப்பு வார்த்தைகளைப்பேசி எமது மாணவர்கள் அந்த வலையில் வீழ்ந்து பல சீரழிவுகளைச் சந்தித்து வருகின்றனர். அவ் வலையில் வீழ்ந்தவர்கள் புகைப் படங்களைப் பரிமாறி அதனை சமூக வலைத்தளங்களில் பதி வேற்றம் செய்வதனால் குறித்த பெண்களின் குடும்பமே சமூதாயத்தில் இழிவாக பார்க்கப்படு கின்ற நிலமை உருவாகின்றது.

எனவே மாணவர்கள் கைத் தொலைபேசி பாவனையிலி ருந்து முற்றாக விலகியிருப்பதன் மூலம் அவர்களையும், சமூகத் தையும் பாதுகாத்துக்கொள்ள முடியும் பொதுவாக 14 தொடக் கம் 16 வயது பிரிவிலுள்ள பெண் பிள்ளைகள் கைத்தொலைபேசி தொடர்பான சிக்கலுக்குள் அகப்பட்டு இன்று நீதிமன்றங் களில் அலைந்து திரிவது கவலைக்குரியது. இவ்வாறான விடயங்களைப் பெற்றோரும், ஆசிரியர்களும் எடுத்துக்கூறி யும் அவற்றை உணராத பிள்ளை களே இன்று நீதிமன்றங்களில் காணக்கூடியதாகவுள்ளது இதுவே நிதர்சனமான உண்மையாகும்.

அண்மைக் காலமாக பெண் களின் புகைப்படங்களை பதிவேற்றம் செய்யப்போவதாக அச்சுறுத்தி பணம்பறிக்கின்ற இணைத்தளக் கள்வர்கள் அதி கரித்துக் காணப்படுகின்றார்கள் இன்று எத்தனையோ தந்தை மார் தங்களது மகள்மார்களின் புகைப்படங்கள் வெளிவந்து விடக்கூடாது என்பதற்காக இலட்சக்கணக்கில் இவ்வாறான கள்வர்களுக்கு செலவு செய்கின் றார்கள் என்பது பற்றியும் அறிந்து கொள்ளுங்கள்

எனவே இவ்வாறான சீரழிவி லிருந்து விடுபட்டு இலக்கு நோக்கி பயணிப்பவர்களாக மாணவர்கள் மாறுகின்ற போது மேய்ப்பாளர்களுடைய பணியை இலகுவாக செய்யக் கூடியதாக விருக்கும். நீங்கள் இங்கே சொல்லப்பட்ட அறிவுரைகளை எடுத்து நடக்கின்றபோது எனது மேய்ப்பாளர் என்ற கடமையை சரியாக செய்தவனாக என்னாலும் திருப்தியடைந்து கொள்ள முடியும் எனவும் நீதிபதி தெரிவித்தார்.



சிறுநீரக நோயாளர்களின் உயிர்காக்கும் இயந்திரத்தை பெற்றுக்கொடுத்த ஆளுநர் செந்தில் தொண்டமான்

மட்டக்களப்பு, ஒக்.29

கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமானின் முயற்சியில் சிறுநீரக நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் பல இலட்சம் பெறுமதியான இயந்திரங்கள் திருகோணமலை, கந்தளாய் வைத்தியசாலை மற்றும் பதுளை வைத்தியசாலைக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஐ.ஓ.சி நிறுவனத்தின் தலைவர் தீபக் தாஸிடம் கிழக்கு மாகாண ஆளுநர் முன்வைத்த கோரிக்கையின் பிரகாரம் மதிப்புள்ள இந்த உயிர்க்காக்கும் சிறுநீரக இயந்திரம் (Dislysis) பெற்றுக்கொடுத்துள்ளார்.

இயந்திரங்களை கையளிக்கும் நிகழ்வு திருகோணமலை சீனக்குடா ஐ.ஓ.சி தலைமையகத்தில் இடம்பெற்றது.

இதன்மூலம் மேற்படி இரண்டு வைத்தியசாலைகளிலும் சிறுநீரக சிகிச்சைகளுக்காக செல்லும் நோயாளர்களின் உயிராபத்துகள் எதிர்காலத்தில் குறைவடையும்.

இலங்கையில் சிறுநீரக நோயாளர் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவரும் சூழலில் செந்தில் தொண்டமானின் முயற்சியால் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள இந்த இயந்திரங்கள் உயிரிழப்புகளை குறித்த பிரதேசங்களில் குறைவடை செய்யும் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதில் ஆளுனர் செயலக செயலாளர், மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் என பலர் கலந்து கொண்டனர்.

மீட்கப்பட்ட ஆயுதங்கள் தொடர்பில் விசாரணை முன்னெடுக்க நடவடிக்கை

அம்பாறை, ஒக்.29

கிணறு ஒன்றில் இருந்து மீட்கப்பட்ட ஆயுதங்கள் தொடர்பாக மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்மன் கோவில் காணி ஒன்றில் அமைக்கப்பட்டிருந்த கிணறு ஒன்றை துப்பரவு செய்த போது இவ்வாறு ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதன் போது , டுஆபு துப்பாக்கி தோட்டாக்கள் 57, ரி 56 ரக துப்பாக்கி ரவை கூடு இரண்டு, 261 தோட்டாக்கள், 0.22 துப்பாக்கிக் குரிய வெற்று தோட்டாக்கள் 46 அதற்குரிய தோட்டாக்கள் 3,எம் 16 துப்பாக்கிகுரிய தோட்டாக்கள் 11, சுடர் துப்பாக்கி (Flare Gun) ஒன்று என்பன கிணற்றினுள் இருந்து மீட்டுள்ளதாக சம்மாந்துறை பொலிஸார் மீட்டுள்ளனர்.

சம்மாந்துறை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக் கமைய குறித்த பொருட்கள் குறித்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ள துடன் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



காணி அபகரிப்பு செயற்பாடுகள் உடன் நிறுத்தப்படவேண்டும்

பாராளுமன்றில் எம்.எஸ் தௌபீக் எம்.பி தெரிவிப்பு



திருகோணமலை, ஒக்.29

திருகோணமலை மாவட்டத்தை பொறுத்தவரையில் காணிப்பிரச்சினையானது எல்லா பிரதேசத்திலும் காணப்படுகிறது. சென்றவாரம் புல்மோட்டை பிரதேசத்தில் அம்மக்களுக்கு சொந்தமான காணிகள் தொல்பொருள் திணைக்களத்திற்கு சொந்தமானது என வர்த்தமானி வெளியிட்டு அக்காணிகளை அபகரிப்பதற்கு முயற்சிப்பதாகவும் சட்ட விரோத காணி அபகரிப்பு செயற்பாடுகளை உடன் நிறுத்தவேண்டும் என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

இவ்வாறான சட்டவிரோத காணி அபகரிப்புக்கள் தொடர்பில் நாங்கள் காணி அமைச்சர், பிரதமர் மற்றும் ஜனாதிபதி என எல்லா உயர்மட்டங்களுக்கும் இப்பிரச்சினையை கொண்டு சென்றும் இதனை நிறுத்து மாறு கோரியும் இதுவரையில் எந்த பிரச்சினைகளும் தீர்க்கப் படவில்லை. இந்த நாட்டின் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுசென்றும் இப்பிரச் சினையை தீர்க்கமுடியவில்லை யாயின் இதை நாங்கள் யாரி டம் சென்று தீர்ப்பது எனவும் கேள்வி எழுப்பினார்.

இம்மக்கள் யுத்தம், சுனாமி யினால் பாதிக்கப்பட்ட வறு மைக்கோட்டிற்கு கீழ் வாழ் கின்ற அப்பாவி மக்களுடைய காணிகளே அபகரிக்கப்பட் டுள்ளது. இப்படியான அநி யாயங்கள் நடக்கின்ற போதும் சட்டம் சரியாக அமுல்படுத்தப் படவில்லை எனவும் குற்றம் சாட்டினார்.

அதேபோல், கிண்ணியா பிர தேச செயலகத்திற்குட்பட்ட சில காணிகள், முத்துநகர், கப்பல் துறை போன்ற காணிகளில் ஆரம் பத்தில் மக்கள் விவசாயம் செய்த போதிலும் பிறகு அது துறைமுக அதிகார சபைக்கு வழங்கப்பட் டுள்ளது. இது பல பிரச்சினை கள் காணப்படுகின்றது எனவும் இப் பிரச்சினைகளை அரசாங் கம் தீர்த்துத்தர வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் ஆணையாளராக முன்னாள் பிரதேச செயலாளர் ஏ.எல்.எம். சலீம் நியமனம்

கல்முனை, ஒக்.29

இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களால் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் ஆணையாளர்களில் ஒருவராக சாய்ந்தமருதை சேர்ந்த சிரேஷ்ட நிர்வாக சேவை அதிகாரி ஏ.எல்.எம். சலீம் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

தேர்தல்கள் மறுசீரமைப்பு சம்பந்தமான ஆலோசனைகளைப் பெறுவதற்காக மேற்படி விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. சிரேஷ்ட நிர்வாக சேவை அதிகாரி அல்ஹாஜ் ஏ.எல்.எம். சலீம் கடந்த காலங்களில் இலங்கை பொது சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களில் ஒருவராகவும், அமைச்சுக்களின் மேலதிக செயலாளராகவும் பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட இந்த



ஆணைக்குழுவில் மேலும் ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் சனாதிபதி சட்டத்தரணி கௌரவ வெவகே பிரியசாத் ஜெராட் டெப், சுந்தரம் அருமைநாயகம், சேனாநாயக்க அலிசெண்ட்ரலாகே, சனாதிபதி சட்டத்தரணி நலின் ஜயந்த அபேசேகர, ரஜித நவீன் கிரிஸ்டோபர் சேனாரத்ன பெரேரா, சாகரிகா தெல்கொட, எஸ்தர் சிறியானி நிமல்கா பிரணாந்து, விதாரணகே தீபானி சமந்த ரொட்ரிகோ ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.



"சம்மாந்துறை மக்களின் அழுகை குரல்" பலஸ்தீன் மக்களுக்கு துஆ பிராத்தனை



முல்லைத்தீவு, ஒக்.29

பலஸ்தீன் மக்களுக்கு ஆதரவாக "சம்மாந்துறை மக்களின் அழுகை குரல் " எனும் தொனிப்பொருளில் துஆ பிராத்தனை சம்மாந்துறையில் ஹிஜ்றா சந்தியில் இடம்பெற்றது.

பலஸ்தீன் மற்றும் இஸ்ரேலுக்கு இடையிலான யுத்தம் இன்று டன் 14 நாட்களாக இடம் பெற்று வருகின்ற நிலையில் யுத்தத்தினால் இதுவரையில் பல ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்துள்ளனர் .

பலஸ்தீன் மக்களுக்கு ஆதரவாக சம்மாந்துறையில் ஒன்று கூடிய பொது மக்கள் ஹிஜ்றா சந்தியில் கொட்டும் மழையில் துஆ பிராத்தனையில் ஈடுபட்டு அமைதியான முறையில் கலைந்து சென்றதுடன் ஹிஜ்றா சந்தியில் இலங்கை மற்றும் பலஸ்தீன் கொடிகள் பறப்பவிடப்பட்டுள்ளதோடு சம்மாந்துறை மக்களின் அழுகைக்குரல் எனும் ஆதரவு பதாதையும் தொங்கவிடப்படுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கனமழையால் வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கின

திருகோணமலை, ஒக்.29

திருகோணமலை மாவட்டத்தில் பெய்த கனமழை காரணமாக தம்பலகாமம்,கிண்ணியா போன்ற பகுதிகளில் உள்ள வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

தற்போது வயல் விதைப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ள நிலையில் பலத்த மழை காரணமாக முற்றாக வெள்ள நீரில் மூழ்கியுள்ளன.

கிண்ணியா சூரங்கல் கற்குழி உள்ளிட்ட வயல் நிலப்பகுதிகள் மற்றும் தம்பலகாமம் கோயிலடி உள்ளிட்ட பல வயல் நிலங்கள் மூழ்கியுள்ளன. இதனால் விவசாயிகள் வயலை உழுது விதைப்பினை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.





தென்கிழக்கு பல்கலையில் அடையாள வேலை நிறுத்தம்



கல்முனை, ஒக்.29

பல்கலைக்கழக தொழிற்சங்கங்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள் சங்கங்கள், கல்விசார் ஆதரவு சங்கங்கள் மற்றும் அரசியல் சங்கங்களின் கூட்டுக் குழுவின் ஏகமனதான தீர்மானத்துக்கு அமைவாக ஆறு அம்ச கோரிக்கைகளை முன்வைத்து தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் கல்விசாரா ஊழியர் சங்கத்தின் தலைவர் எம்.ரி.எம். தாஜூடீன் தலைமையில், ஒரு மணித்தியால அடையாள பணிப்பறக் கணிப்பு பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்திலும் சம்மாந்துறையில் அமைந்துள்ள பிரயோக விஞ்ஞான பீடத்திலும் இடம்பெற்றது.

இவர்கள் பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்கள் தங்களது போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தேசிய பல்கலைக்கழக ஒழுங்கமைப்பை பாதுகாக்க, பல்கலைக்கழக ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க, வரவு செலவு திட்டத்தில் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் 40% சம்பள உயர்வை கிடைக்கச்செய்தல், ஓய்வூதியம் மற்றும் வருங்கால வைப்பு நிதிக்கு விதிக்கப்பட்ட வரிகளை திரும்பப்பெறுதல், பல்கலைக்கழக பணியிடங்களில் காணப்படும் வெற்றிடங்களை உடனடியாக நிரப்புதல் அனைத்துப் பதவிகளுக்கும் ஒரே நேரத்தில் ஆட்சேர்ப்பு நடைமுறைகளை தயாரித்தல்.

1. கடந்த காலங்களில் முன்னெடுக்கட்ட பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் 107% சம்பள அதிகரிப்பு எங்களுக்கு வழங்குவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டு 05 வருடங்கள் கடந்த நிலையில் இதுவரைக்கும் இந்த நிலுவை வழங்கப்படவில்லை. எனவே மிகுதியாக வுள்ள 15% ஐ வழங்குமாறு அரசாங்கத்திற்கு கோரிக்கை விடுக்கின்றோம்.

2. பல்கலைக்கழக ஊழியர்களின் பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வினை வழங்குங்கள் அத்துடன் பல்கலைக்கழகங்களிலுள்ள ஆளணிப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்து, திறந்த ஆட்சேர்ப்பு முறையை நடைமுறைப்படுத்துதல்.

3. பல்கலைக்கழக ஊழியர்களுக்கு இல்லாமல் ஆக்கப்பட்ட சம்பள அதிகரிப்பை உடனடியாக வழங்குங்கள்.

4. 2019ம் ஆண்டு ஏனைய அரசாங்க ஊழியர்களுக்கு அதிகரிக்கப்பட்ட 2500.00 ரூபா சம்பள அதிகரிப்பு பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வழங்கப்படவில்லை.

5. தற்போதைய பொருளாதார நெருக்கடியால் சகல அத்தியவசியப் பொருட்களுக்குமான விலைகள் வானளவு அதிகரித்துக் காணப்படுகின்றது. எனவே 40% சம்பள அதிகரிப்பை உடனடியாக வழங்குங்கள் எனவும் அரசாங்கத்தை கோருகின்றோம்.

6. எங்களுடைய UPF, ETF மற்றும் Pension போன்ற பணங்கள் அத்தனையும் அரசாங்கத்தால் மீளவும் எடுக்கப்பட்டு பிறதொரு தேவைக்காகப் பயன்படுத்துவதை உடனடியாக நிறுத்த வேண்டும். இவ்வாறு எங்களுடைய பணங்களை மீளவும் எடுப்பதன் காரணமாக ஓய்வு பெற்றுச்செல்லும் எங்களுடைய ஊழியர்களுக்கு உடனடியாகப் அப்பணத்தை பெற்றுக்கொள்வதில் பாரிய சிக்கல்கள், சிரமங்கள் ஏற்படுகின்றன.



சட்டவிரோத நடவடிக்கையை கட்டுப்படுத்த பாதுகாப்பு குழுவின் ஒன்றுகூடல்

கல்முனை, ஒக்.29

சாய்ந்தமருதில் சட்ட விரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்த சாய்ந்தமருது 08ம் பிரிவின் சிவில் பாதுகாப்பு குழுவின் ஒன்றுகூடல் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பரிசோதகர் வை.பி. அய்யூப் தலைமையிலும் பொலிஸ் உத்தியோகத்தர் எஸ். அக்பர் அவர்களின் ஒருங்கிணைப்பிலும் சாய்ந்தமருது அல்-ஜலால் பாடசாலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது 08ம் பிரிவின் கிராம நிலதாரி எ. நஜீபா, சிவில் பாதுகாப்பு குழுவின் தலைவர் அபுல் ஹசன், உப தலைவர் எஸ். ஏ. முஹம்மட் அஸ்லம், நிர்வாக உத்தியோகத்தர்கள், பொதுநிறுவன தலைவர்கள், பெண்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது தற்காலத்தில் நடைபெற்று கொண்டிருக்கும் குற்றங்கள் இதனால் ஏற்படும் பாதிப்புகள் என பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்



புல்மோட்டையில் வறிய மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டி வழங்கி வைக்கப்பட்டன

கல்முனை, ஒக்.29

சர்வதேச மனித நேய அமைப்பான முஸ்லிம் எய்ட் நிறுவனத்தின் முன் மாதிரிக் கிராம அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பாடசாலைக் கல்வியை மேம்பாடுத்தும் நோக்குடன் புல்மோட்டை சதாம் முஸ்லிம் வித்தியாலயம், ஜின்னாபுரம் கலவன் பாடசாலை மற்றும் புல்மோட்டை மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளில் மாணவர்களுக்கான 25 சைக்கில்கள் கையளிக்கும் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றன.

புல்மோட்டை சதாம் வித்தியாலத்தில் நடைபெற்ற நிகழ்வில் குச்சவெளி உதவி பிரதேச செயலாளர் திருமதி பி. மோஹனமுரளி,புல்மோட்டை பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி டபிள்யூ.எம்.டபிள்யூ விஜயகோன், பாடசாலை அதிபர்கள், முஸ்லீம் எயிட் செயற்திட்ட முகாமையாளர் பாஸ்லான் தாசிம், முஸ்லிம் எயிட் நிறுவான ஊழியர்கள், மாணர்வர்கள் மற்றும் பெற்றோர் கலந்து சிறப்பித்தனர்.

கடுமையான பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் சிக்கியிருக்கும், வறிய, பின்தங்கிய குடும்பங்களிலுள்ள கல்வி கற்கின்ற தூர பிரதேசங்களில் இருந்து வருகின்ற மாணவர்களின் கல்வி மேம் பாட்டிற்காக வழங்கப்பட்டது. முஸ்லிம் எய்ட் நிறுவனத்தின் உதவிகளை பாடசாலை அதிபர்கள், சமூகத்தினரும் வரவேற்று நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.



சம்மாந்துறையில் காட்டு யானைகள் தொல்லை! கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்

சம்மாந்துறை பொதுமக்கள் விசனம்



அம்பாறை, ஒக்.29

சம்மாந்துறைப் பிரதேசத்தில காட்டு யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான மோதல் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

காட்டு யானை ஒன்று வீட்டு மதில்களையும், கடை ஒன்றினையும், பயன்தரும் வாழை மற்றும் மரவள்ளி மரங்களையும் சேதப்படுத்தியுள்ளது.

தமது வீட்டுச் சுவரையும், கடையையும் காட்டு யானை ஒன்று உடைத்துக் கொண்டிருப்பதனை அவதானித்த உரிமையாளர் அதனை விரட்டுவதற்கு முற்பட்டுள்ளார். இவ்வேளையில் காட்டு யானை தம்மை தாக்கி விடுமோ என்ற அச்சத்தில் வீட்டுக்கு திரும்பிய வேளையில் உயிர் இழந்த சம்பவம் ஒன்று சம்மாந்துறை செந்நெல் கிராமத்தில் இடம் பெற்றுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை பிரதேசத்தில் வயற் பிரதேசங்களை அண்மித்த பகுதியில் வாழும் பொது மக்கள் இரவு வேளையில் காட்டு யானைகளின் தொல்லையால் அச்சமடைந்துள்ளார்கள்.

தினமும் இரவு வேளையில் காட்டு யானைகள் நடமாடிக் கொண்டிருப்பதாலும், பொது மக்களையும், பயன் தரும் பயிர் மற்றும் மரங்களையும் தாக்கி சேதப்படுத்திக் கொண்டிருப்பதனால் இரவு வேளைகளில் நடமாடுவதற்கு அச்சமடைந்துள்ளார்கள்.

எனவே, காட்டு யானைகளின் வருகையை கட்டுப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சரும், சம்மாந்துறை பிரதேச செயலகமும், அதிகாரிகளும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று பொது மக்கள் கேட்டுக் கொள்கிறார்கள்.

சம்மாந்துறை பிரதேசத்தில் இவ்வருடத்தில் மாத்திரம் மூன்று பேர் காட்டு யானைகளின் தாக்குதலில் மரண மடைந்துள்ளார்கள். பலர் காயமடைந்துள்ளார்கள்.

காட்டு யானைகளை கட்டுப்படுத்துமாறு பொது மக்கள் பல முறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கோரிக்கைகளை முன் வைத்த போதிலும் எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றார்கள்.



கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு விழா

மட்டக்களப்பு, ஒக்.29

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வருடாந்தப் பொதுப் பட்டமளிப்பு விழா வந்தாறுமூலையில் அமைந்துள்ள பல்கலைக் கழக பிராதான வளாக நல்லையா மண்டபத்தில் அக்டோபர் 7 ம் மற்றும் 8ம் திகதிகளில் வெகு சிறப்பாக நடந்தேறியது.

உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் அவர்களின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இப்பட்டமளிப்பு விழாவில் கலாநிதிப் பட்டம், பட்டப்பின் படிப்பு பட்டங்கள், உள்வாரி மற்றும் வெளி வாரி பட்டங்கள் என 1760 பட்டங்கள் உறுதி செய்யப்பட்டன.

கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் ஓய்வு பெற்ற பேராசிரியர் மா.செல்வராஜா தலைமைதாங்கிய இப்பட்டமளிப்பு விழாவில், வேந்தரால் பட்டங்கள் உறுதி செய்ததுடன் பட்டதாரிகளுக்கான பட்டங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

பட்டமளிப்பு விழாவின் இரண்டாம் நிகழ்வில் இலங்கை, மாலை தீவு மற்றும் தென் ஆசியாவிற்கு உரித்தான உலக வங்கியின் முன் னணி பொருளியலாளரும் மனித அபிவிருத்திக்கான தலைவருமான பேராசிரியர் கர்ஷ அத்துருபனே பிரதம விருந்தினராக கலந்து சிறப் பித்தார்.

மேளவாத்தியங்கள் மற்றும் பல்கைகலைக்கழக மாணவர்களின் கலைகலாசார நிகழ்வுகளுடன், அனைத்து பட்டதாரிகளும் விழா மண்டபத்திற்குள் அழைத்துச் செல்லப்பட்டதுடன் பட்டமளிப்பு விழா மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமானது. இதன்போது, வேந்தரின் ஆசிச்செய்தி ஓய்வு பெற்ற பேராசிரியர் மா.செல்வராஜா அவர்களாலும், பட்டமளிப்பு விழா ஆசிச்செய்தி இலங்கை, பேராசிரியர் கர்ஷ அத்துருபனே அவர்களாலும் வழங்கப்பட்டன.

முதலாம் நாள் முதலாம் அமர்வில், நிகழ்வில் 1 கலாநிதி, 5 விஞ் ஞான கல்வியில் முதுமாணி, 14 விவசாய விஞ்ஞானத்தில் முதுமாணி, 1 கல்வியியல் முதுமாணி, 12 கலை முதுமாணி, 8 வியாபார நிர்வாக முதுமாணி, 13 அபிவிருத்தி பொருளியல் முதுமாணி, 1 முகாமைத் துவ பட்டப்பின்படிப்பு டிப்ளோமா ஆகிய 55 பட்டப்பின் தகமைகளுக்கான பட்டங்களும், 87 வைத்தியமாணி - சத்திர சிகிச்சைமாணி, 34 தாதியியல் விஞ்ஞானமாணி, 31 சித்தமருத்துவம் - சத்திர சிகிச்சை இளமாணி, 61 சிறப்பு விவசாய விஞ்ஞானமாணி என 213 இளமாணி பட்டங்களும் வழங்கப்பட்டன.

முதலாம் நாள் இரண்டாவது அமர்வில், 10 வணிக நிர்வாகமாணி, 72 சிறப்பு வணிக நிர்வாகமாணி, 9 சந்தைப்படுத்தல் முகாமைத் துவத்தில் சிறப்பு வணிக நிர்வாகமாணி, 5 வணிகவியல்மாணி, 36 சிறப்பு வணிகவியல்மாணி, 37 கணக்கீடு மற்றும் நிதியியல் சிறப்பு வணிகவியல்மாணி, 43 முகாமைத்துவத்தில் விஞ்ஞானமாணி, 37 கணக்கியல் மற்றும் நிதி முகாமைத்துவத்தில் விஞ்ஞானமாணி, 10 தகவல் முகாமைத்துவத்தில் விஞ்ஞானமாணி, 4 மனிதவள முகா மைத்துவத்தில் சிறப்பு வணிக நிர்வாகமாணி, 11 வியாபார முகா மைத்துவத்தில் விஞ்ஞானமாணி என 274 பட்டங்களும், 3ஆவது அமர்வில் 142 விஞ்ஞானமாணி, 65 நுண்கலைமாணி - இசை, 41 நுண்கலைமாணி - நடனம், 28 நுண்கலைமாணி - நாடகமும் அரங்கியலும், 42 நுண்கலைமாணி - கட்புலமும் தொழிநுட்பவியல் கலையும் என 318 பட்டங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இரண்டாம் நாளில் முதலாம் அமர்வின்போது, 1 கல்விமாணி, 250 கலைமாணி (விசேட மற்றும் பொதுப்பட்டம்) என 251 பட் டங்களும் இரண்டாம் அமர்வின்போது 250 கலைமாணி (விசேட மற்றும் பொதுப்பட்டம்), 47 பிரயோக பௌதீகவியல் மற்றும் இலத்திரனியல் விஞ்ஞானமாணி, 41 கணினி விஞ்ஞானமாணி ஆகிய 338 பட்டங்களும், மூன்றாம் அமர்வின்போது 77 விவசாய தொழில்நுட்பம் மற்றும் முயற்சியாண்மையில் உயிர்முறைமைகள் தொழில்நுட்ப கௌரவ இளமாணி, 112 தொடர்பாடல் கற்கை களில் கலைமாணி, 66 மொழியில் கலைமாணி, 7 வியாபார நிர்வாக மாணி (வெளிவாரி), 49 வியாபார முகாமைத்துவமாணி (வெளிவாரி) என்ற ரீதியில் 311 பட்டங்கள் 2ம் நாளின் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் அமர்வுகளில் பட்டதாரிகளுக்கு வழங்கி கௌர விக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



முஸ்லிங்களின் பிரச்சினைகளும் ஜெனீவாவில் ஆதாரங்களுடன் முன்வைக்கப்படல் வேண்டும்

ஜனாதிபதி செயலணி முன்னாள் உறுப்பினர் கலிலூர் ரஹ்மான்

கல்முனை, ஒக்.29

கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள புல்மோட்டை அரிசிமலை பிரதேசத்தில் அமைந்துள்ள காணி விவகாரம் தொடர்பில் பௌத்த தேரர் களுக்கும் முஸ்லிம் சமூகத்திற் கும் இடையில் நீண்ட காலமாக நிலவிவரும் முரண்பாட்டை காணி அமைச்சர் தலையிட்டு விரைவில் சட்ட ரீதியாக தீர்த்து வைக்க வேண்டிய தரு ணம் வந்துள்ளது.

ஏனெனில் காணி விவகாரம் தொடர்பில் பௌத்த தேரர்களுக் கும் முஸ்லிங்களுக்குமிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு அது கைகலப்பாக மாறும் வாய்ப்பு கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகும் காணொளிகளில் தெரிகிறது. இதனால் இன மோதல்கள் உருவாகும் வாய்ப் புள்ளது. இந்த நிலை நாட்டுக்கு ஆபத்தானதாகும் என ஜனாதி பதி செயலணியின் முன்னாள் உறுப்பினரும், கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ. கலிலூர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும்,

எனவே நாடு முழுவதும் உள்ள இவ்வாறான இன முரண் பாட்டை தோற்றுவிக்கக்கூடிய காணிகள் தொடர்பில் அரசாங் கம் முறையாக அவசரமாக தலையிட வேண்டும். இல்லை யேல் பேராசை அரசியல் நலன் களுக்காக இரு தரப்பு கடும் போக்கு சிந்தனையாளர்கள் பிரச்சினைகளுக்கு வேறு உருவம் கொடுத்து, திசை திருப்பி குழுப் பிரச்சினைகளாக மாற்றி நாட்டை சீரழித்து விடுவார்கள். இவர் களை பற்றி அலட்டிக்கொள் ளாமல் இவ் வாறான காணிப் பிரச்சினை களை விட்டால் அது நாளடைவில் விரிவடை யும் சாத்தியம் உள்ளது.

குறிப்பாக வடக்கு, கிழக்கில் உள்ள முஸ்லிம் சமூகம் நாட் டின் ஆட்புல ஒருமைப்பாட் டிற்காக பாடுபட்டதன் கார ணமாக யுத்தத்தின் போது பெருமளவான காணிகளை யுத்தகாலத்தில் இழந்துள்ளனர். முஸ்லிம் சமூகத்தின் சமய மற்றும் அரசியல் மற்றும் சிவில் தலைவர்கள் உடனடியாக தலையிட்டு யுத்தகாலத்தில் இழந்த முஸ்லிங்களின் காணி களை முறையான நடவடிக்கை களை எடுத்து சட்ட ரீதியாக மீட் டுக்கொடுக்க முன்வரவேண்டும்.

இந்தப் பிரச்சினைகளை முன்வைத்து அரசியல்வாதிகள் தொடர்ந்தும் அரசியல் செய் யாது நிரந்தர தீர்வை காண நாட்டின் ஆட்சியாளர்களை அணுகி தேசிய அரசியல் நீரோட்டத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும். மட்டுமின்றி அரசியல் சக்திகளை மட்டும் நம்பிக்கொண்டிராமல் மனி



தாபிமானமுள்ள சட்ட வல்லு நர்கள், முஸ்லிம் சட்டத்தரணி கள் நீதித்துறை நடவடிக்கை மூலம் தீர்வு காண முன்வர வேண்டும். இவர்களுக்கு பக்க பலமாக முஸ்லிம் சிவில் அமைப் புக்கள், வர்த்தக பிரமுகர்கள் இருக்க வேண்டும்.

அதேபோல், போருக்கு முன் னும் பின்னும் நான்கு தசாப்தங் களாக முஸ்லிம் சமூகம் அனு பவித்த துன்பங்களை ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழு விடம் ஆதாரங்களுடன் அறிக் கைகளை கொண்டு தெரிவித்து முஸ்லிங்களுக்கு எதிரான அடக்குமுறைகளுக்கு முற்றுப் புள்ளி வைப்பது மனிதாபிமான மனிதநேயத்தின் எல்லையற்ற பொறுப்பாகும் என்று தெரிவித் துள்ளார்.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் விஜயம் இரண்டு மில்லியன் ரூபாய் நிதியும் ஒதுக்கீடு

மட்டக்களப்பு, ஒக்.29

மருதமுனை அல்- மனார் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க பொருளாளரும், பாட சாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு உறுப்பினரு மான எம்.ஐ.எம். வலீதின் அழைப்பிற்கிணங்க கல்முனை கல்வி வலய மருதமுனை அல்- மனார் மத்திய கல்லூரிக்கு கிழக்கு மாகாண கல்விய மைச்சின் செயலாளர் எச்.ஈ.எம். டபிள்யு.ஜி.திஸ ாநாயக்க குறுகிய விஜயம் ஒன்றை மேற்கொண்டு பாடசாலை முகாமைத்துவ சபையுடன் கலந் துரையாடினார்.

மருதமுனை அல்- மனார் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க பொருளாளரும், பாட சாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு உறுப்பினரு மான எம்.ஐ.எம். வலீத் எடுத்துக்கொண்ட முயற்சி யின் பயனாக, மாகாண கல்வித் திணைக்களத்திட மிருந்து கிடைக்கப்பெற்ற குறித்த நிதி தொடர்பி லான ஆவணங்கள் பாடசாலை முகாமைத்துவத் தினரின் முன்னிலையில் கிழக்கு மாகாண கல்வி யமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம். டபிள்யு.ஜி.திஸ ாநாயக்க அவர்களினால் பாடசாலை அதிபர் ஐ. உவைத்துல்லாவிடம் பாடசாலையில் வைத்து கையளிக்கப்பட்டது.

மருதமுனை அல்- மனார் மத்திய கல்லூரி அதிபரின் வேண்டுகோளின் பேரில் கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹதுல் நஜீம் அவர்களின் சிபாரிசின் அடிப்படையிலும் பழைய மாணவர் சங்க பொருளாளரும், பாட சாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு உறுப் பினருமான எம்.ஐ.எம். வலீத் முன்னெடுத்த இந்த நிதி பெறுகை மூலம் பாடசாலையில் அவசரமாக திருத்தவேண்டியும், புனரமைக்க வேண்டியும் இருந்த கட்டிடங்கள் சீரமைக்கப்பட்டு புனர மைப்பு செய்யப்பட்டது.

பாடசாலைக்கு நேரடியாக விஜயம் செய்து பாடசாலையின் குறைநிறைகளையும், கல்வி மேம்பாட்டு வேலைத்திட்டங்களையும், அடைவு மட்ட உயர்வுக்கான வழிவகைகளையும், பௌதீக தேவைகள் தொடர்பிலும் கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம். டபிள்யு. ஜி. திஸாநாயக்க பாடசாலை முகாமைத்துவத்தின



ருடன் விரிவாக கலந்துரையாடினார். உயர்தரப் பிரிவிற்கான ஆசிரிய ஆளணி மற்றும் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் கேட்டறிந்து கொண்ட கல்வி அமைச்சின் செயலாளர் அவர் கள், கல்முனை வலயக் கல்விப்பணிப்பாளருடன் கலந்துரையாடி உள்ளகரீதியாக ஆசிரிய சமப்படுத்துகையினை மேற்கொள்ள ஆலோசனை வழங்கினார்.

இவ்வேளையில் குறித்த நிதி கிடைக்க காரண மாக இருந்த பழைய மாணவர் சங்க பொருளாள ரும், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு உறுப்பினருமான எம்.ஐ.எம். வலீத், வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ்.எஸ். நஜீம், வலயக்கல்வி அலுவலக கணக்காளர் வை. ஹபிபுல்லாஹ், கல்வி மாவட்ட பொறியலாளர் ஏ.எம். சாஹீர், மாகாண கல்வித்திணைக்கள பிரதம கணக்காளர் ஏ.எம். றபீக், கிழக்கு மாகாண முன்னாள் கல்வி பணிப் பாளர் அகிலா கனகசூரியம், கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம். டபிள்யு. ஜி.திஸாநாயக்க உட்பட பலருக்கும் பாடசாலை சமூகம் நன்றிகளை தெரிவித்தது.

இந்நிகழ்வில் பாடசாலை அபிவிருத்தி நிறை வேற்றுக்குழு செயலாளர் ரி.எம்.றிஹான் மற்றும் கல்லூரியின் பிரதி அதிபர்கள் உள்ளிட்ட முகா மைத்துவ சபை உறுபினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

நீதிபதி சரவணராஜாவின் விடயத்தை அரசியலாக்கி விளம்பரம் செய்கிறார்கள்

விமலின் வன்னி பிரதேச இணைப்பு செயலாளர் பகிரங்க குற்றச்சாட்டு



வவுனியா, ஒக்.29

நீதிபதி சரவணராஜாவின் விடயத்தை அரசியலாக்கி விளம்பரம் செய்கிறார்கள் என பராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச அவர்களின் வன்னி பிரதேசத்துக்கான இணைப்பு செயலாளர் எம்.புஷ்பதேவா தெரிவித்துள்ளார்.

வவுனியா ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீதிபதி விவகாரத்தை அரசியலாக்கி விளம்பரம் தேடுகிறார்கள். நீதிபதி ஐயா நீதிச் சேவைக்கு கடிதம் ஒன்று அனுப்பி உள்ளார். குறித்த கடிதம் சேர வேண்டிய இடத்திற்கு சேர்வதற்கு முன்னரே சில முகநூல் போராளிகள், அரசியல்வாதிகள் அதை வைத்து அரசியலை ஆரம்பித்து விட்டார்கள்.

நீதிபதி அவர்கள் குறித்த கடிதத்தில் வெறுமனே தன் வாழ்க்கைக்கு அச்சுறுத்தல். எனவே மன அழுத்தம் காரணமாக பதவி விலகுவதாக எழுதியுள்ளார். அதன் விபரம், விளக்கம், எங்கும் எந்த ஊடகத்திடமும் நேரடியாக கொடுக்கப்படவில்லை. அதை வைத்து இங்கு பல கதை எழுதுகிறவர்கள் எழுதுகிறார்கள். நீதிபதி ஐயா விவகாரம் தொடர்பில் உண்மை கண்டறிய என ஒரு குழு நியமிக்கப்பட்டு, விசாரணை செய்கிறது. நடவடிக்கை எடுக்கபடும் என்று நீதி சேவை ஆனைக்குழு அறிவித்தும் உள்ளது. எனினும் நீதிமன்ற மற்றும் நீதி சேவை விடயம் என்பதால் இதன் உண்மைத் தன்மை அறியாமல் நான் நிறைய விமர்சனம் செய்ய முடியாது.

நீதிபதி விவகாரத்தை வைத்து எமது வடக்கு நீதிபதிகளையும், சட்டதரணிகளையும் குறை சொல்லும் அளவுக்கு இந்த அரசியல்வாதிகள் முற்படுவது கண்டிக்கத்தக்கது. அது ஒரு பக்கம் இருக்க, கடையடைப்பு போராட்டம் என்று எனக்கு தெரிந்த வரையில் கடந்த 30 வருடமாக செய்கிறார்கள். இதனால் என்ன பயன் கிடைத்தது. அரசியல் இலாபமும், ஒவ்வொரு அரசியல் கட்சியும் தலைவரும் நாங்கள் இருக்றோம் என்று காட்டி கொள்வதற்கு மட்டுமே உதவியுள்ளது.

அந்த காலத்தில் விடுதலை புலிகளினால் கடையடைப்பு செய்ய கோரி ஹர்த்தால் என்று அறிவிக்கப்பட்டால், அக்கடைகளை பூட்ட கூடாது என்று கடைகளை உடைத்தும், மிரட்டல் விடுத்தும் திறக்குமாறு கூறிய ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எப் இப்பொழுது, 2009இற்கு பின் கடையடைப்பை செய்ய கோருகின்றனர் என்பது தான் வியப்பாக உள்ளது.

இதே போல், இருக்கும் அரசியல் கட்சிகள் எல்லோரும் ஒன்றாக சேர்ந்தும் அறிக்கை விடுவதும் இல்லை. அந்த காலம் தொடக்கம் இந்த காலம் வரை தமிழர் விடுதலை என்கிறவர்கள் தமிழர்களை அழித்து தான் செயற்பட்டார்கள்.

ஹர்த்தால் என்று இப் பொழுது கடை உரிமையாளர் தொடக்கம் வேலையாட்க்கள் வரைக்கும் ஒரு விடுமுறை கிடைத்துள்ளது. அதை கொண்டாடுவோம் என்கிற மன நிலையில் தான் கடையடைப்பை செய்கிறார்களே தவிர இங்கு உணர்வு பூர்வமாக பூட்டுவது கிடையாது.

இன்றும் வடக்கில் கடையடைப்பை செய்தால் தமிழர்களுக்கு தானே நஷ்டம் ஏற்படுமே தவிர மாற்றானுக்கு இல்லை. ஆக நாட்கூலி வேலை செய்பவர்களையும் வறுமை கோட்டின் கீழ் வாழும் மக்களின் நிலையையும் யார் பார்ப்பது. வடக்கில் ஹர்த்தால் செய்தால் வடக்கு தானே முடங்கும். தெற்கில் என்ன ஆகும். ஆக தமிழர்களே தமிழர்களின் பொருளாதாரத்தை சிதைக்கிறார்கள் என்பதுவே உண்மை.

இந்த அரசியல்வாதிகள், போராளிகள் முடிந்தால் கொழும்புக்கு போய் அங்கு ஒரு முடக்கத்தை செய்து அரசுக்கு அழுத்தம் கொடுங்கள் பார்ப்போம். வெறுமனே பாராளுமன்றில் பாதுகாப்புடன் சத்தமாக பேசி, பொலிஸ் பாதுகாப்புடன் வலம் வருகிறது பெருமை இல்லை. உங்கள் ஆதரவாளர்களை எல்லாம் கொழும்பிற்கு அழைத்து சென்று முடக்கம் செய்ய முடியுமா. நீங்கள் மக்களுக்காக தானே அரசியல் செய்கிறீர்கள்? சாகும் வரை போராட்டம் செய்ய போகிறோம் என்று கொழும்பில் நடத்துங்கள். அதே நேரம் உங்கள் ஆதர வாளர்களை மாத்திரம் அமர்த்தாமல் தலைவர்கள் அமரமுடி யுமா?

மக்களும் ஏதோ என்பது போல் பழக்கபட்டு விட்டார்கள். அவ்வளவும் தான் இதுவரை காலமும் கடையடைப்பை செய்து என்ன பலன் கிடைத்தது என்று சொல்ல யாரும் இல்லை. அதே போல் தான் இம்முறையும்.

இதேவேளை, ஊடகவியளாருக்கு ஒரு அன்பான வேண்டுகோள், மறைமுகமாக ஆதரவு கொடுக்காதீர்கள். அதாவது சில வியாபார ஸ்தலங்கள் திறந்திருந்தால் குறித்த தளத்தை புகைப்படம் எடுத்து நீங்கள் சமூகவலைத் தளங்களில் பதிவிடுவதால் சில போலி முக நூல் விமர்சகர்களும், சில கேவலமான செயற் பட்டார்களும் தகாத வார்த்தையால் விமர்சனம் செய்வார்கள். அதனால் பல அவமானங்களை சந்தித்து அவர்களும் தமது வியாபார ஸ்தலங்கள் பூட்டுகிறார்கள். எனவே அன்பான ஊடக நண்பர்களே இவ்வாறான செயல்களை தவிர்ப்பதும் நல்லது என நினைக்கின்றேன்.

மேலும், போலி தேசியம் பேசும் அரசியல்வாதிகளே முடிந்தால் கொழும்பில் கடையடைப்பை செய்யுங்கள். இல்லை மக்களுக்காக விடுதலை என்று காலத்துக்கு காலம் நிலைமாறி பேசுகிறதை விடுத்து உண்ணா விரதம் இருங்கள். அது முடியுமா..? அதை செய்யமாட்டீர்கள். ஆக ஏமாறும் மக்கள் இருக்கும் மட்டும் ஏமாற்றி கொண்டே தான் இருக்க போகிறீர்கள். இந்நிலை நீண்ட நாட்களுக்கு இல்லை. உங்கள் போன்ற போலி பேசும் அரசியல்வாதிகளுக்கு எதிராகவே பகிரங்க மாக ஊடக சந்திப்பை செய் கிறேன்.

இதேபோல், உள்ள ஏனைய அரசியல்வாதிகள், முக்கியமாக அரச தரப்பு அரசியல்வாதிகள், தேசியகட்சி சார்ந்தவர்கள், நீங்களும் முக நூலில் விளம் பரத்தை மட்டும் தேடமால் மக்களுக்கு உண்மையை சொல்லி விளங்கபடுத்துங்கள். உண்மையை சொன்னால் எதிர்ப்பு வரும் என்று அஞ்சி ஓடி மறையாதீர்கள். அதே போல் உண்மையை அறிந்தால் ஆதரவு தரக்கூடிய மக்களும் இருப்பார்கள்.

ஈபிடிபி, கைக்கிய தேசியக் கட்சி, பொதுஜனபெரமுன என்பவற்றைச் சேர்ந்த பிரமுகர்கள் எல்லோரும் சத்தம் இல்லாமல் இருக்கிறது ஏன். உண்மை சொல்ல பயமா..? நீங்களும் மக்களுக்காக இல்லையா. உங்க அரசியலுக்காக மாத்திரமா உள்ளீர்கள். உண்மையில் போலி தேசியம் பேசி மக்களை உசுப்பேற்றும் கூட்டத்தினர் சீசனுக்கு சீசன் ஒவ்வொரு விடயத்தை முன் நிறுத்தி மக்களை குழப்பிவிட்டு தங்கள் அரசியலை செய்கிறார்கள்.

உதாரணமாக நீதிபதி ஐயாவின் பிரச்சனை ஆரம்பிப் பதற்கு முன் ஆசாத் மௌலான பிரச்சினை. அது முடிய முன் இப்பொழுது நீதிபதி பிரச்சனை. இப்படியே இவர்கள் எங்கள் மக்களை ஏமாற்றி தமது அரசியலை செய்து கொண்டே போகிறார்கள். எனவே மக்கள் இனியும் இவர்களை நம்பாமல் இவர்களின் போலி முகத்திரைகளை கிழிக்க முன்வரவேண்டும் எனத் தெரிவித்தார்.



சர்வதேச அளவில் சாதித்த மாணவி கால்தீன் பாத்திமா லனாவுக்கு பாராட்டு

கல்முனை, ஒக்.29

சம்மாந்துறை கல்வி வலய நாவிதன்வெளி சாளம்பைக்கேணி கமு/சது/ அஸ்- சிராஜ் மகா வித்தியாலயத்தில் (தேசிய பாடசாலை) தரம் 09இல் கல்வி பயிலும் மாணவி கால்தீன் பாத்திமா லனா சர்வதேச அபாகஸ் போட்டியில் முதலிடம் பெற்றமையை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வொன்று பாடசாலை அதிபர் எஸ்.எம்.எம். யூசுப் தலைமையில் நடைபெற்றது.

அல்- மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்காவின் "திறமையான வர்களை தேடி வாழ்த்துதல்" வேலைத்திட்டத்தின் கீழ் நடைபெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினரும், அல்- மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்காவின் தவிசாளருமான யூ.எல்.எஸ். ஹூதா உமர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சர்வதேச சாதனை மாணவி லானாவை பொன்னாடை போத்தி, நினைவுச்சின்னம், பதக்கம், சான்றிதழ், பரிசில்கள் போன்றன வழங்கி கௌரவித்தார்.

நகருக்கு தொலைவில் உள்ள கிராமத்தவர்கள் சாதிக்க தகுதியற்ற வர்கள் என்ற சிந்தனையை உடைத்து சர்வதேச அரங்கில் தனது ஊருக்கும், பாடசாலைக்கும் பெருமை சேர்த்த மாணவியை கிழக்கு மண்ணின் மகளாக போற்றி கௌரவிப்பதில் மகிழ்ச்சியடைவதாகவும், இதுபோன்ற பல சாதனையாளர்களை ஆசிரியர்கள் இனிவரும் காலங்களில் தொடர்ந்தும் அடையாளப்படுத்துவார்கள் என்ற நம்பிக்கை இருப்பதாகவும், சாதனையாளர்களை தூக்கிவிட எப்போதும் மீஸான் பௌண்டஷன் தயாராக இருப்பதாகவும், சாதனையாளர்களுக்கு ஒழுக்கம் கட்டாயம் அவசியமாக இருப்பதுவும் இங்கு உரை நிகழ்த்திய கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினரும், அல்- மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்காவின் தவிசாளருமான யூ.எல்.எஸ். ஹூதா உமர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அல்- மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்கா பிரதிப் பொது செயலாளர் டப்லியூ. ஷவ்தப் உஸைம், விருதுகள் மற்றும் திறமையானவர்களை தேடி வாழ்த்துதல் பிரிவின் பணிப்பாளர் ஜே.எம். கஸான், அல்- மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்கா இளைஞர் பிரிவின் நிர்வாகிகளான ஜே.எம். பாஸித், கே.எம். ருஸ்தி, பாடசாலை பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாத்திமா லானாவின் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

தேர்தல்கள் தொடர்பில் சுவிஸ் நாட்டு தூதர அதிகாரிகளுடன் கபே அமைப்பு



கொழும்பு, ஒக். 29

கபே தேர்தல் கண்காணிப்பு அமைப்பு மற்றும் சுவிஸ் தூதரக அதிகாரிகளுக்கிடையிளான கலந்துரையாடல் கொழும்பில் உள்ள சுவிஸ் நாட்டுக்கான இலங்கை தூதரகத்தில் இடம் பெற்றன.

குறித்த சந்திப்பின் போது தற்காலிக அரசியல் நிலவரம் மற்றும் எதிர்வரக்கூடிய தேர்தல்களின் போது கபே அமைப்பின் கண்காணிப்பு திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இதில் கபே அமைப்பு சார்பாக அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கீன் மற்றும் நிர்வாக பணிப்பாளர் சுரங்கீ ஆரியவன்ஷ ஆகியோரும். சுவிஸ் தூதரகம் சார்பாக அதன் முதல் செயலாளர் ஜஸ்டின் பொலெட் மற்றும் அதன் அதிகாரிகளான கணிஷ்க ரத்னப் பிரிய மற்றும் மெலீனா ஆகியோரும் களந்து கொண்டனர்.

நீதி மரணித்துவிட்டதாகவே உணரமுடிகின்றது - ரவிகரன்



முல்லைத்தீவு, ஒக்.29

இலங்கையில் தற்போது நீதி மரணித்துவிட்ட தாகவே உணரமுடிவதாக முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித் துள்ளார்.

தற்போது நாட்டில் போதைப் பொருட்கள் பல்கிப்பெருகியுள்ளதுடன், சட்டவிரோத செயற் பாடுகளும் அதிகரித்துக் காணப்படுகின்ற நிலை யில், நீதிபதி சரவணராஜா உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு, அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு இந்த நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டுள்ள நிலைமை இந்த நாட்டில் நீதி மரணித்ததற்கு ஒப்பானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் முன்பாக நீதிபதி சரவணராஜாவிற்கு நீதி கோரி இடம்பெற்ற கவனயீர்ப்பு நடவடிக்கையில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

நீதிபதி சரவணராஜாமீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டமை மற்றும், உயிர் அச் சுறுத்தல் விடுக்கப்பட்டமைக்கு நீதிகோரி தொடர்ந்தும் போராட்டங்கள் முன்னெடுக் கப்பட்டுவருகின்றன.

அந்தவகையில் சட்டத்தரணிகள் ஒன்றி ணைந்து கொழும்பில் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்திருப்பதுடன், குறித்த தினத்தில் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர்களாலும் கனவயீர்ப்பு நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப் பட்டன.

இவ்வாறு கவனயீர்ப்பு நடவடிக்கைக்கென முல்லைத்தீவு மாவட்ட இளைஞர்கள் அழைப்பு விடுத்திருந்த நிலையில், புலனாய்வாளர்கள் பல வீடுகளுக்குச் சென்று அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

அவ்வாறு புலனாய்வாளர்களால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதால், பல இளைஞர்கள் குறித்த கவனயீர்ப்பு நடவடிக்கையிலே இணைந்து கொள்ளவில்லை.

இருப்பினும் கணிசமான இளைஞர்கள் முகத் தில் கறுப்புத்துணி கட்டி, கவனயீர்ப்பு நடவடிக் கையில் ஈடுபட்டதுடன் அதனைத்தொடர்ந்து, மேலதிக மாவட்ட செயலரிடம் மகஜர் ஒன்றை யும் கையளித்துள்ளனர்.

இலங்கையைப் பொறுத்தவரையில் நீதி மர ணித்து விட்டது என்றே சொல்லவேண்டியிருக் கின்றது.

ஏன் எனில் தற்போது நாட்டிலே போதைப் பொருட்கள் பல்கிப் பெரிகிப்போயுள்ள நிலை யில், நாட்டு மக்கள் இவற்றால் பல்வேறு துன்பங் களுக்கும் உள்ளாகிவருகின்றனர்.

இவ்வாறான சூழலில் நீதிபதி சரவணராஜா, நீதியின் பங்கம் நின்று கட்டளை வழங்கியதற்காக அவருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு, அழுத் தங்கள் பிரயோகிக்கப்பட்டு இந்த நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.

இத்தகைய நிலைமைகள் இந்த நாட்டில் நீதி மரணித்து விட்டதான உணர்வையே முழு நாட்டு மக்களுக்கும் உணர்த்துகின்றது.

எனவே நீதிபதி சரவணராஜா விடயத்தில் சரி யான விதத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டு, நியாயமான தீர்வினை வழங்கவேண்டு மென்பதே எமது நிலைப்பாடு - என்றார்.



காட்டு யானை தாக்குதலுக்கு இலக்காகி பெண் ஒருவர் பலி!

சம்மாந்துறை, ஒக்.29

சம்மாந்துறை பிரதேசத்தில் நெய்னாகாடு வம்பியடி எனும் இடத் தில் இரவு காட்டு யானை தாக்கி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

இறக்காமம் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட இறக்காமம் 9ஆம் பிரிவைச் சேர்ந்த புஹாரி சரீப் சிபானி (றிபானி) 43 வயதுடைய 3 பிள்ளைகளின் தாய் ஒருவரே இச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் சம்மாந்துறை ஆதார வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

தேசிய மட்டத்தில் வரலாற்று சாதனை படைத்த சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய மாணவர்கள்



கல்முனை, ஒக்.29

கலாசார அலுவல்கள் அமைச்சினால் வருடம் தோறும் நடாத்தப்பட்டு வரும் பிரதீபா - 2023 தேசிய மட்டப் போட்டிகளில் சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் பயிற்சி பெற்று வரும் மாணவர் குழுவினர்கள் கிழக்கு மாகாணத்தில் முதலாம் இரண்டாம் இடங்களை பெற்றதுடன் கனிஷ்ட நடன நிகழ்ச்சியான ரபான், கோலாட் டம் போட்டியிலும், சிரேஷ்ட நிகழ்ச்சியான கோலாட்டம் ஆகிய இரண்டு பிரிவுகளில் கனிஷ்ட பிரிவு போட்டியில் ரபான் கோலாட்டம் குழுவினர் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தினைபெற்று வரலாற்று சாதனை புரிந்துள்ளர்கள்.

தேசிய போட்டிகள் பொல் கொல்ல மகாவளி கல்விக் கல் லூரியில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது. அதில் சிரேஷ்ட நிகழ்ச்சி கோலாட் டம் நடனகுழுவினர் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்கள். அதே போல் சித்திரம் வரைதல் தேசிய மட்டத்தில் எம்.எல்.எப். ஜியா மூன்றாம் இடத்தினையும் ஜெ.றின்சான் ஆறுதல் பரிசினை யும் பெற்று சாதனை படைத் துள்ளார்கள்.

இந்த வெற்றியில் கலந்து கொண்ட மாணவர்கள் மற்றும் கலாசார மத்திய நிலையத்தில் இம் மாணவர்களைப் பயிற்று வித்த வளவாளர்களான சிரேஷ்ட ஆசிரியர் எம்.ஐ.எம். அமீர் மற்றும் அவரோடு இணைந்து இந்த மாணவர்களை பாரம் பரிய முறையில் பயிற்றுவித்த மூத்த கலைஞர்களான எம்.ஐ. அலாவுதீன், எம்.எச். பைசர், ஏ. இஸ்ஸதீன், ஆசிரியர்களான எ.எல்.எம். ஸாஜி, ஐ. சியாம், எஸ்.எச்.எ.கபூர் (dolky), மற்றும் இசை வடிவம் அமைத்த இசைக்கலைஞர் எம். அக்பர் ஆகியோர் உட்பட இந்த வெற்றிக்காகப் இரவு பகல் பாராது மிகவும் பாடுபட்டு பயிற்சியளித்து அனைவரின துன் வெற்றிக்கு பின்புலமாக இருந்த கலாசார மத்திய நிலைய பொறுப்பதிகாரி யூ. கே.எம். றிம்ஸான் அவர்களுக் கும், இவ்வெற்றிக்கு பின்புல மாக இருந்த சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம். எம். ஆசிக் அவர்களுக்கும் கலாசார மத்திய நிலையத்தின் அபி விருத்தி சபை செயலாளர் அஸ் வான் மௌலானா, கலாசார மத்திய நிலையத்தின் அபி விருத்தி சபை உபசெயலாளர் ஊடகவியலாளர் நூருல் ஹூதா உமர், சபை நிறைவேற்று உறுப்பினர்கள், ஊடகவியலா ளர் எம்.எஸ்.எம். ஸாகிர், மத் திய நிலையத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.பி. நவ்ஸாத், எஸ். புவித்ரன் மற்றும் இம் மாணவர்களின் பெற்றோர்கள், பாடசாலை அதிபர்கள் ஆகி யோருக்கு வாழ்த்துக்களோடு பாராட்டுக்களும் தெரிவிக்கப் படுகிறது.

முஸ்லிம் பெண் எழுத்தாளர்களின் மூன்றாவது தேசிய மாநாடு காத்தான்குடியில்

மட்டக்களப்பு, ஒக். 29

ஆற்றலுள்ள பெண்களின் அமைப்பான ஸ்ரீலங்கா பென் கிளப்பின் (SLPC) யின் "முஸ் லிம் பெண் எழுத்தாளர்களின் மூன்றாவது தேசிய மாநாடு - 2023" "குடும்பம் எங்கள் விழி ஆற்றல் எங்கள் வழி" தொனிப் பொருளில் காத்தான்குடி சீஜிஜி மண்டபத்தில் இடம்பெற்றன.

ஸ்ரீலங்கா பென் கிளப்பின் (SLPC) ஸ்தாபகத் தலைவி சம் மாந்துறை மஷூறா தலைமை யில் இடம்பெறும் இவ்விழா வில், இலங்கையின் பல பாகங் களிலுமிருந்து அறுபது பெண் எழுத்தாளர்கள் கலந்து கொள் கின்றனர்.

இந்நிகழ்வில், சிறப்பு விருந் தினராக ஒலுவில் தென்கிழக் குப் பல்கலைக் கழக சிரேஷ்ட பேராசிரியர் றமீஸ் அப்துல் லாஹ் மற்றும் முதன்மை விருந்தினர்களாக பேராதனை வளாக மெய்யியல்துறை ஒய்வு நிலைத் தலைவரும் பேராசிரி யருமான எம்.எஸ்.எம். அனஸ் மற்றும் காத்தான்குடி நகரசபை செயலாளர் றிப்கா ஷபீன் ஆகி யோர் கலந்து சிறப்பிக்கின்றனர்.

மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம். எம். அமீர், காரைதீவு கோட் டக்கல்விக் பணிப்பாளர் பைந் தமிழ்க்குமாரன் ஜே. டேவிட், மட்டக்களப்பு உதவி கல்விக் பணிப்பாளர் முருகு தயானந்தன், தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட நூலகரும் எஸ்.எல். பி.சி யின் போஷகருமான கலாநிதி மஸ்ரூபா முகம்மது மஜீத், அம்பாறை மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தி யோகத்தரும் எஸ்.எல். பி.சி யின் போஷகருமான ஏ.எல் தௌபீக், விடிவெள்ளி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எம்.பி.எம். பைரூஸ், ஒலி, ஒளி சிரேஷ்ட ஊடகவியலாளர் பா ஹாஷிம் ப அலவி அஷ்ஷேக் இர்பான் மௌலானா, மின்னல் வெளி யிட்டகப் பணிப்பாளர் நாவ லாசிரியரும் எஸ்.எல்.பி.சி.யின் போஷகருமான கவிஞர் அஸீஸ் எம். பாரிஸ், இஸ்லாமிய இலக் கியக் கழகத் தலைவர் முன்னாள் நகர சபை உறுப்பினர் கவிமணி ரீ.எல். ஜவ்பர் கான், அவதானி மீடியாவின் பணிப்பாளர் கவிஞர் மதியன்பன் மஜீத் ஆகியோர் நிகழ்வில் கௌரவ அதிதிகளாகவும் கல்முனை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரும் எஸ்.எல். பி.சி.யின் போஷகருமான ஏ. எம்.தௌபீக் மற்றும் எம்.எச். பௌசுல் ஹிபானா காத்தான் குடி பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உதவியாளர் பி. சிந்து உஷா, காத்தானகுடி பிர தேச செயலக கலாசார அபி விருத்தி உத்தியோகத்தர் எஸ்.ஏ.எம்.நளீம் (நளீமி), ஊட க வியலாளரும் பல்துறைகலை ஞருமான கலைச்சுடர் எம்.எஸ். எம். ஸாகிர், கல்முனை பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெனிதா பிரதீபன் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து சிறப் பிக்கவுள்ளனர்.

மூன்று அமர்வுகளாக நடை பெறும் இவ்விழாவில், முதல் அமர்வு பெண்களுக்கு மட்டு மானது.

இரண்டாம் அமர்வில் இரு பத்திரெண்டு முஸ்லிம் பெண் களின் ஆங்கில மொழிபெயர்ப் புக் கவிதைகள் அடங்கிய "இமயம் தழுவும் இறக்கைகள்" கவிதைத் தொகுதி வெளியிட்டு வைக்கப்படவுள்ளதுடன் கவிதை, சிறுகதை மற்றும் ரமழான் மாதப் போட்டிகளில் வெற்றியீட்டியோர்களுக்கான பரிசளிப்பும் நடைபெறவுள் ளது.

மூன்றாவது அமர்வில் SLPC யின் சிறந்த நிகழ்ச்சித் தயாரிப் பாளர்கள் நெறியாளர்கள் விருதுகள் வழங்கிக் கௌரவிக் கப்படவுள்ளனர்.

இப்பெரும் விழாவில், கல்வி மான்கள், கலைஞர்கள், கலா சார உத்தியோகத்தர்கள், ஊடக வியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

Canada Pledges $60M in Humanitarian Aid for Palestinians in Gaza

Canada has committed to sending an extra $50 million in humanitarian support to the Palestinians residing in the Gaza Strip, as revealed by Global Affairs Canada on Saturday. This follows the $10 million allocated just a week prior.

The funds are aimed at ensuring essential supplies like food, water, medical services, protection provisions, and other vital forms of relief. Moreover, Global Affairs Canada emphasized their commitment to ensuring that the assistance does not end up in the hands of Hamas.

Expressing the urgency of the situation, Foreign Affairs Minister Melanie Joly remarked, “It’s paramount that the civilians of Gaza receive the life-saving help they desperately need promptly.” She also assured that “Canada remains dedicated to collaborating with its reputable humanitarian affiliates to ensure the funds assist those in dire conditions.”

Currently, both Joly and International Development Minister Ahmed Hussen are in Cairo, Egypt, attending a peace conference addressing the ongoing Israel-Hamas discord. They shared plans to confer with other foreign delegates. Joly is also slated to converse with the staff of the Canadian Embassy in Cairo concerning aid measures for Canadians in the vicinity, including those in the Gaza Strip.

There was an announcement on Friday from Global Affairs Canada about the potential evacuation of Canadians from Gaza, contingent on establishing a humanitarian pathway at the Rafah crossing into Egypt. This crossing was initiated on Saturday, facilitating the entry of 20 essential aid trucks into Gaza. Despite this, a total of 200 trucks remained positioned at the crossing. As of the report’s publication, there hasn’t been an update regarding the status of the evacuations.

Julie Sunday, a representative from GAC, mentioned on Friday Canada’s readiness to welcome its citizens once the aid channel to Gaza is fully operational. Additionally, there are teams in Cairo on standby to aid the evacuation process. “The priority is ensuring aid reaches those in need, followed by facilitating evacuations,” she elaborated.

Prime Minister Justin Trudeau stated on Friday that about 150 Canadians, along with their 150 family members, are currently in Gaza.

One Canadian resident of Gaza, Shatha Koraz, recounted her experiences to Global News, depicting the dire circumstances there. Having evacuated her home, which was completely obliterated, she described the situation as nightmarish. “Gaza feels like a deserted town, and the conditions are terrifying, every moment of every day,” Koraz said. “Resources are scarce; water, food, electricity, and even internet connectivity are almost non-existent.”

The recent escalation in Gaza came after a sudden assault by Hamas on Israel a fortnight ago, leading to the tragic deaths of around 1,400 individuals, predominantly civilians. Gaza’s health departments report that the retaliatory actions have resulted in the demise of approximately 4,300 Palestinians, a large number of whom were non-combatants.



Canada-India Diplomatic Dispute Leads to Slower Visa Processing for Indians

The ongoing diplomatic tensions between Canada and India are anticipated to result in a slowdown in the visa processing for Indians wishing to travel to Canada. This announcement came directly from Canada’s Immigration Minister, Marc Miller, during a press conference held in Ottawa on October 19.

The primary reason behind this slowdown is India’s request for Canada to reduce its diplomatic presence in India. Canada’s Foreign Affairs Minister, Mélanie Joly, confirmed that 41 Canadian diplomats have already left India, leaving only 21 diplomats remaining.

This diplomatic dispute between the two nations stems from an accusation made by Canada’s Prime Minister, Justin Trudeau, on September 18. Trudeau accused India of being involved in the murder of a prominent Sikh activist in Canada, Hardeep Singh Nijjar.

In response to this situation, Miller disclosed that Immigration, Refugees and Citizenship Canada (IRCC) will significantly reduce the number of Canadian staff members stationed in India, reducing their count from 27 to just 5, as per an official IRCC statement.

Miller emphasized that Canada will continue to accept and process both temporary and permanent resident applications from India, despite the reduced staff. To mitigate the impact of fewer employees, IRCC will adjust the workload for Visa Application Centres (VACs), which handle most of the Indian applications. However, some processes may need to be handled through email, resulting in longer processing times, slower responses to inquiries, and delays in visa issuance.

It’s important to note that VACs are operated by third-party organizations and will continue to function normally. Applicants can still receive administrative support, send passports, and provide biometrics at one of IRCC’s ten centers in India.

While welcoming newcomers from India is vital for Canada, the slower processing may affect various aspects, such as the processing times, response times to inquiries, and the return of visas or passports.

According to the IRCC statement, the majority of Indian applications are already processed outside the country, with 89% being managed through IRCC’s global network. The remaining 5 IRCC staff members in India will focus on tasks requiring an in-country presence, including urgent processing, visa printing, risk assessment, and overseeing key partners.

In line with Miller’s comments, Indian applicants can expect delays in overall processing times, responses to inquiries, and the return of their visas or passports.

India is a significant source of newcomers to Canada, with over 118,000 Indians becoming Canadian permanent residents in 2022, accounting for 27% of all new permanent residents. Additionally, Canada admitted over 226,000 Indian international students last year, making up 41% of all new international students. Nearly 60,000 Indians also acquired Canadian citizenship in 2022.

Indians are well-suited to Canada’s immigration system due to their English-language proficiency, high levels of education, work experience, and skills. Many Indian applicants opt to study in Canada first, with the Student Direct Stream (SDS) being a popular fast-track study permit option for them. IRCC data indicates that over 95% of SDS applications originate from India.



TUTORING
ALL GRADES - ALL SUBJECTS 90% MARKS 100% RESULTS
HELPING STUDENTS SUCCEED SINCE 1997
We not only help the Students with their homework, but also make sure they feel more comfortable in their regular schools.
I.B.Students Welcome FRENCH IMMERSION AVAILABLE.
EQAO for Grade 3 & Grade 6. Literacy Test for High School
THE TALENT ACADEMY
8130 SHEPPARD AVE. EAST/ MORNING SIDE . UNIT 202
TEL : 647 333 2576

புதிய குரல் பத்திரிகை Puthiya Kural Newspaper Publications LLC நிறுவனத்தால் 2023 ஒக்டோபர் 29 அச்சிட்டு வெளியிடப்பட்டது.